வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram மனிகிராம் பணப்பரிமாற்றம்

Ria ரியா பணப்பரிமாற்றம்

Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 01.06.2023 வியாழக்கிழமை | இதழ் : 174 | பக்கங்கள் : 16

## யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் அரசியல்வாதிகள் அசமந்தபோக்கு!

### சீ. வீ. கே. சிவஞானம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீரை கொண்டு வருவதில் அரசியல்வாதி கள் அசமந்தத்தனம் காட்டுகின்றனர் என்று வடக்கு மாகாண சபை அவை தலைவர் சீ . வீ. கே. சிவஞானம் குற்றஞ் சாட்டியுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங் கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயல கத்தில் நடைபெற்றது. இங்கு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் கொண்டுவ தற்கான வேலை திட்டங் கள் ஆரம்பமாகி நடைபெற்று

15

## யாழ். குடிதண்ணீர் விநியோகம் ஆராய ஐந்து பேர் குழு நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் தொடர்பில் ஆராய வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் ஐவர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கி ணைப்பு குழுக் கூட்டம் நேற்று புதன் கிழமை காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

இதில், யாழ்ப்பாண மாவட்டத்துக் கான குடிதண்ணீர் விநியோகம் தொடர் பிலும் ஆராயப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து ரைத்த வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், யாழ். மாவட்டத்துக்கான குடிதண்ணீர் விநி யோகம் தொடர்பில் வடக்கு மாகாண சபையால் பரிந்துரைக்கப்பட்ட தீர்மா னம் ஒன்று கிடப்பில் உள்ளது. அதனை நடைமுறைப்படுத்த

15

## ஜனாதிபதி இன்று உரை

கொழும்பு, ஜூன் 01

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு இன்று வியா ழக்கிழமை இரவு 8.00 மணிக்கு விசேட உரை யாற்றவுள்ளார் என ஜனா திபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 9 மாதங்களில் அரசாங்கம் மேற் கொண்ட நடவடிக் கைகள் நாட்டின்

15

# ஊடகங்களை கட்டுப்படுத்த ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் குழு

## எதிர்க்கட்சிகள், சிவில் அமைப்புகள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 01

**இலத்திரனியல் ஊடகங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

**அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு எதிர்க் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றன.**

ஒளிபரப்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்ட வரைவு ஒன்றை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையி லான அமைச்சரவை உபகுழு தயாரித்துள்ளது.

இலத்திரனியல் ஊட கங்கள் தொடர்பாக பார தூரமான விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட் டுள்ளன என்று கூறப்படு கின்றது.

இந்த சட்டவரைவின் பிரகாரம் ஐவர் கொண்ட ஒளிபரப்பு ஒழுங்குபடுத் தல் ஆணைக்குழு அமைக்கப்படும். ஊட கத்துறை அமைச்சின் செயலாளரும் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத் தல் ஆணைக்குழுவின் பணிப்பாளரும் இந்த ஆணைக்குழுவில் நிய மிக்கப்படுவர். ஏனைய மூன்று உறுப்பினர்களை அரசமைப்பு பேரவையின் அனுமதியுடன் ஜனாதி பதி நியமிப்பார்.

இவர்களில் ஒருவரை தலைவர் பதவிக்கு நிய மிக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு வழங் கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் ஊட கங்களின் செயல்பாடுக ளுக்கு பாரதூரமான வகையில் அழுத்தம்

15

## எரிபொருட்களின் விலைகள் திருத்தம்!

### பெற்றோல் (92ஒக்.) ரூ. 15, ம. எண். ரூ. 50 குறைந்தன

கொழும்பு, ஜூன் 01

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நள்ளி ரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரி பொருட்களின் விலைகளை திருத்தியுள்ளது.

இதன்படி, 92 ஒக்ரைன் பெற்றோல் லீற்றர் ஒன்று 15 ரூபாயால் குறைக்கப்பட்டு 318 ரூபாயாக நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், 95 ஒக்ரைன் பெற்றோல் 20 ரூபாய் அதிகரித்து 385 ரூபாயாகவும் சுப்பர் டீசல் 10 ரூபாய் அதிகரித்து 340 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் 50 ரூபாய் குறைக்கப்பட்டு 245 ரூபாயாகவும் நிர்ண யிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தொழிற்சாலை மண்ணெண்ணெய் 60 ரூபாய் குறைக்கப்பட்டு ரூபா 270 ரூபாயாக நிர் ணயிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இந்திய மீனவர் அத்துமீறல் தேசிய பாதுகாப்பை கடற்படை நடைமுறைப்படுத்துவதில்லையா?

### கடற்படை அதிகாரியிடம் எம். பிக்கள் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 01

வரவு - செலவு திட் டத்தில் 20 வீதம் பாது காப்பு துறைக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. அவ்வாறி ருக்கையில் இந்திய மீன வர்களின் அத்துமீறல் எவ் வாறு நடக்கிறது? தேசிய பாதுகாப்பை கடற்படை நடைமுறைப்படுத்தவில் லையா என்று கடற் படை அதிகாரியிடம் கேள்விகளை எழுப்பினர் யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர்கள்.

யாழ். மாவட்ட ஒருங் கிணைப்பு குழு கூட்டம் நேற்று நடந்தது. இதன் போது, இந் திய மீனவர் களின்

15



## தையிட்டி விகாரைக்கு எதிராக மீளவும் முன்னணி போராட்டம்!

### இரவு வேளையும் தொடர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 01

தையிட்டியில் அமைக் கப்பட்ட திஸ்ஸ விகா ரையை அகற்ற வலியு றுத்தி நேற்று முதல் மீண்டும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டத்தில் ஈடு பட்டு வருகின்றது.

தமிழ் மக்களுக்கு சொந்தமான இந்தக் காணியை விடுவிக்க வலி யுறுத்தியும் நடைபெற்று வரும் இந்தப் போராட் டத்தில் அந்தக் கட்சியின் தலைவரும் எம். பியுமான கஜேந்திரகுமார் பொன் னம்பலமும் பங்கேற்றுள் ளார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு கடந்த மே 4ஆம் திகதி

15

## கசிப்பு குடித்த இளைஞர் இரத்த வாந்தி எடுத்து பலி

### புங்குடுதீவில் துயரம்

யாழ்ப்பாணம், ஜூன் 01

கசிப்பு அருந்திய நிலை யில் இளைஞர் ஒருவர் இரத்த வாந்தி எடுத்து உயிரிழந்தார் என்று அறிய வருகின்றது.

யாழ்ப்பாணம் - புங் குடுதீவில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதா வது,

நிறை போதையில் இருந்த இளைஞர் திடீ ரென இரத்த வாந்தி எடுத் துள்ளார். அவரை உறவினர்கள் மருத் துவமனையில்

15

## இந்திய மீனவரை ஆயுத முனையில் கட்டுப்படுத்த நாம் முயலவில்லை!

### கடற்படை அதிகாரி பதில்

யாழ்ப்பாணம், ஜூன் 01

வடக்கில் அத்துமீறி மீன்பிடி தொழிலில் ஈடு படும் இந்திய படகுகளை துப்பாக்கி முனையில் கட் டுப்படுத்த முயற்சிக்க வில்லை என்று வடக்கு மாகாண கடற்படை தலைமையகத்தின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

யாழ். ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பாராளு மன்ற உறுப்பினர்கள் இந் திய மீனவர்களின் அத்து மீறல் தொடர்பில் எழுப் பிய கேள்விக்கு பதிலளிக் கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

மேலும், ஒரு சில படகுகளில்

15

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இலங்கைக்கு சீனா முழு ஆதரவு!

### ரணிலுக்கு சீன பிரதி அமைச்சர் உறுதி

கொழும்பு, ஜூன் 01

இலங்கையின் பொரு ளாதாரத்தை கட்டியெ ழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் முயற்சிக ளுக்கு சீன அரசாங்கம் பூரண ஆதரவை வழங் கும் என்று அந்த நாட் டின் வெளிவிவகார பிரதி அமைச்சர் சன் வெய்டாங் வலியுறுத்தியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம் படுத்துவதில் சீனா

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# டொலரின் பெறுமதி வீழ்ச்சி அனுகூலத்தை நிர்மாணத்துறையை வலுவாக்க வேண்டும்

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூன் 01
உலக சந்தையில் சிமெந்து, இரும்பு, அலுமினியம் உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் குறைந்துள்ள நிலையில் டொலரின் பெறுமதி வீழ்ச்சியின் அனுகூலத்தை இலங்கையின் நிர்மாணத்துறையை வலுவூட்டுவதற்கு பயன்படுத்த வேண்டுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

விலை அதிகரிப்பு விகிதத்துடன் ஒப்பிடுகையில் விலை குறைப்பு வீதம் மிகவும் மெதுவாகவே காணப்படுவதாக நிர்மாணத்துறையின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது நிதி இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

உலக சந்தையின் கட்டுமானப் பொருட்களின் விலை வீழ்ச்சியை அவதானித்து ஒரு மாதத்தில் கூடி உரிய விலை குறைப்பு வீதத்தை அறிவிக்க முடியும். கடந்த சில மாதங்களில் ரூபாயின் பெறுமதி சுமார் 20 வீதத்தால் வலுவடைந்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கைகள் கூறுகின்றன.

குறிப்பாக ரூபாயின் பெறுமதியை ஒப்பிடும் போது விநியோகத் துறைக்கான பொருட்களை அதிகளவில் இறக்குமதி செய்து வருவதால் அவற்றின் விலையை குறைப்பது நியாயமானதா? என ஆராயுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

ஏனெனில், விலை உயர்வுடன் ஒப்பிடும் போது டொலரின் அதிகரிப்பு பொருட்களின் விலை உயர்வு போல் வேகமாக இடம்பெறாது என்பதை நாம் பொதுவாக அறிவோம். எனவே பொருளாதாரத்தை மீட்டெடுக்க சட்ட வழிகாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# காலவதியான பொருட்கள் விற்ற வர்த்தகர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூன் 01
காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் பலர் நேற்று அராலியில் சிக்கினர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் நேற்றைய தினம் அராலியில் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த சோதனை நடவடிக்கையின்போது காலாவதியான பிஸ்கெற், நூடில்ஸ் உள்ளிட்ட பல பொருட்கள் பிடிபட்டன. காலாவதியான இந்தப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த பல வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்கள் பிடிபட்டன. இந்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஐ)

# யாழ்ப்பாண ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஜூன் 01
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

கலந்துரையாடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல், தையிட்டி விகாரை விவகாரம், தீவுப் பகுதிகளுக்கான படகு போக்குவரத்து, சுகாதாரத் துறை, விவசாயத்துறை போன்ற பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.



இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவ பாலசுந்தரன் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பங்கேற்றனர். (ஐ)

# புகைத்தல், போதை எதிர்ப்பு தின கொடி வேலைத் திட்டம் ஆரம்பம்!



யாழ்ப்பாணம், ஜூன் 01
நல்லூர் பிரதேச செயலகத்தின் சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தின கொடி வேலைத் திட்டம் நேற்று யாழ். மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ச. முரளிதரன் தலைமையில் ஆரம்பமானது.

அரசாங்க அதிபர் பணிமனையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கல்வியங்காடு சமுர்த்தி வங்கியின் ஜே/92 கிராம சேவையாளர் பிரிவுக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் கொடி தின வேலைத் திட்டத்துக்கு தமது பங்களிப்பை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில், அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன், நல்லூர் பிரதேச செயலாளர், மாவட்ட விடயப் பொறுப்பு முகாமையாளர், நல்லூர் பிரதேச செயலக தலைமைப் பீட முகாமையாளர், முகாமைத்துவ பணியாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# மாணவிகளுடன் சேட்டை விட்ட இளைஞர் பொலிஸாரால் கைது

வடமராட்சி, ஜூன் 01
மாணவிகளுடன் சேட்டை விட்டவர்களை தட்டிக் கேட்ட மாணவனை தாக்கிய இளைஞர்களில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை நெல்லியடி பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவிகளுடன் பாடசாலைக்கு அருகில் நின்ற இரு இளைஞர்கள் சேட்டை விட்டனர். இதனை மாணவன் ஒருவர் தட்டிக் கேட்டுள்ளார்.

அந்த மாணவனை இரு இளைஞர்களும் மூர்க்கத்தனமாக தாக்கி விட்டு அங்கிருந்து தப்பியோடினர். இந்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவிகளும் மாணவனும் பொலிஸாருக்கு முறைப்பாடளித்தனர்.

விரைந்து செயல்பட்ட பொலிஸார் இளைஞர் ஒருவரை கைது செய்ததுடன், இந்த சம்பவத்துக்கு பயன்பட்ட மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றினர். மற்றையவரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-03)

# மறைத்து வைக்கப்பட்டிருந்த கூரிய ஆயுதங்கள் கைப்பற்றல்

யாழ்ப்பாணம், ஜூன் 01
அச்சுவேலியில் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கூரிய ஆயுதங்கள் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

அச்சுவேலி - செல்வநாயகபுரம் பகுதியில் நேற்று மதியம் இந்தக் கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் அச்சுவேலி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-03)

# பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து இறந்த சிறுமியின் குடும்பத்துக்கு குழாய் கிணறு

## ஊர் மக்கள் ஒன்றிணைந்து அமைத்து வழங்கினர்

தென்மராட்சி, ஜூன் 01
பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுமியின் வீட்டுக்கு குழாய் கிணறு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

மிருசுவிலில் கடந்த மே 27ஆம் திகதி பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி விழுந்து சசிகரன் கிங்சிகா என்ற 6 வயது சிறுமி உயிரிழந்தார்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் அந்தப் பகுதி இளைஞர்கள் ஒன்றிணைந்து பாதுகாப்பற்ற கிணற்றை மூடினர். அத்துடன், குழாய் கிணறையும் அமைத்து வழங்கினர்.

இளைஞர்களின் இந்தச் செயலை அப்பகுதி மக்கள் பாராட்டி வருகின்றனர். (ஐ-02)



# சிறுகதை தொகுதி அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 01
இளம் எழுத்தாளர் கீதா கணேஷின் 'இருளைக் கிழித்த கோடு' சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 மணிக்கு கே. கே. எஸ். வீதி கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த் துறையின் மூத்த விரிவுரையாளர் ஈ. குமரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நூல் மதிப்பீட்டை யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் துறையின் மூத்தவிரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன், கருத்துரையை ஆசிரியரும் எழுத்தாளருமான சிறீலேகா பேரின்பகுமார் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நிகழ்ச்சி தொகுப்பை அபிவிருத்தி உத்தியோகத்தர் வை. கோவர்த்தன் மேற்கொள்ளவுள்ளார்.

நூலின் முதன்மை பிரதியை லங்கா புத்தகசாலையின் பணிப்பாளர் க. ராஜேந்திரனிடம் இருந்து வடக்கு மாகாண முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் க. சற்குணராஜா பெற்றுக்கொள்வார். (ஐ)

ஈழநாடு
Eelanadu 01.06.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 18
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மத முரண்பாடுகள்?

மதம் ஓர் அரசியல் கருவியாக தொழில்படும் நாடுகளில் மத முரண்பாடுகள் திட்டமிட்டு ஏற்படுத்தப்படுவது உண்டு. அண்மைக்காலமாக, இடம்பெற்றுவரும் சில சம்பவங்கள் இலங்கையிலும் அவ்வாறான சூழ்ச்சிகள் இடம்பெறுகின்றனவா என்னும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. மதம் இந்தியாவில் ஒரு சக்திவாய்ந்த அரசியல் கருவியாக இருக்கின்றது. ஒரு நாட்டில் பெரும்பான்மை மக்களால் ஒரு குறிப்பிட்ட மதம் பின்பற்றப்படும்போது, அந்த மக்கள் மீதான செல்வாக்கை தக்கவைப்பதன் மூலம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான கருவியாக மதம் கருத்தில் கொள்ளப்படுகின்றது. இதற்கப்பால் நாட்டை அந்நிய சக்திகளிடமிருந்து பாதுகாத்தல் என்னும் அடிப்படையிலும் மதம் ஒரு கருவியாக நோக்கப்படுகின்றது.

இந்தியாவை பொறுத்தவரையில் ஆளும் பாரதிய ஜனதா (பா. ஜ.) கட்சியின் செல்வாக்கின் பிரதான அடித்தளமாக இருப்பது அதன் மதச் செல்வாக்காகும். இந்தியாவின் சக்திவாய்ந்த 'இந்துத்வா' அமைப்பான ஆர். எஸ். எஸ். - இந்துக்களின் கையில் இந்தியாவின் அதிகாரம் இருக்க வேண்டும் என்பதற்காகவே பா. ஜ. க. என்னும் அரசியல் கட்சியை உருவாக்கியது. இந்தியாவின் பெரும்பான்மை மக்களான இந்து மக்கள் மத்தியில் பா. ஜ. க. செல்வாக்கை இழக்கும்போது, தற்போதைய பா. ஜ. கவின் ஆட்சி அதிகாரம் கேள்விக்கு உள்ளாக்கலாம். அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாதென்பதற்காக பா. ஜ. க. பல்வேறு நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

இலங்கையில் பாரம்பரிய கட்சிகளாக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியன பௌத்த மக்களை திருப்திப்படுத்துவதை பிரதான இலக்காகக் கொண்டிருந்தாலும்கூட அரசியல் அதிகாரத்தை கைப் பற்றும் நோக்கில் பௌத்தம் பெரியளவில் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பமாக கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தைத்தான் குறிப்பிட முடியும். கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதற்காக பௌத்த மக்களின் உணர்வுகள் தூண்டப்பட்டன. பௌத்தம் ஆபத்தில் இருப்பதான தோற்ற மொன்று ஏற்படுத்தப்பட்டது. வெற்றிபெற்ற கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிப் பிரமாணத்தை ருவன் வெலிசாயவில் மேற்கொண்டார். தன்னை யொரு பௌத்த - சிங்கள தலைவனாகப் பிரகடனம் செய்தார். இதன் மூலம் பௌத்தத்தை காப்பாற்றும் ஒரு தலைவனாக தன்னை முன்னி றுத்தினார்.

கோட்டாபயவின் வீழ்ச்சிக்கு பின்னர் ராஜபக்ஷவின் குடும்ப அதிகாரம் வீழ்ச்சியுற்றது. ராஜபக்ஷக்கள் முன்னைய செல்வாக்கு நிலையில் இல்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் மதமுரண்பாடுகளை ஏற்படுத்துவதன் ஊடாக அதிகாரத்துக்கு வருவதற்கான திட்டங்கள் போடப்படுகின்றனவா? இவ்வாறானதொரு கேள்வி அண்மைக்காலத்தில் அவ்வப்போது தென்னிலங்கை அரசியல்வாதிகளால் முன்வைக்கப்படுகின்றது. அண்மையில், இடம்பெற்ற சில சம்பவங்களை சிலர் இதற்கான உதாரணமாக முன்வைக்கின்றனர். இதேபோன்று, வடக்கு - கிழக்கு சூழலிலும் குறிப்பாக வடக்கில் இந்து மதத்தை முன்னிலைப்படுத்தும் விவாதங்களைக் காண முடிகின்றது. ஆனால், வடக்கு - கிழக்கு சூழலைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் மத்தியில் மதத்தை ஓர் அரசியல் கருவியாக கைக்கொள்வது கடினமான ஒன்றாகும். மேலும், அந்தளவுக்கு இதனை முன்னெடுக்கும் வல்லமையுள்ள இந்து மத தலைவர்களும் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை.

எவ்வாறாயினும், அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில் மத முரண்பாடுகளை தீவிரப்படுத்துவதானது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அதனை எவர் மேற்கொண்டாலும் அது தவறானது. மதம் மனிதர்களின் தனிப்பட்ட விவகாரம். ஒருவர் எந்த மதத்தை பின்பற்றுவதென்பது அவர்களின் தனிப்பட்ட நம்பிக்கை சார்ந்த விடயம். ஆனால், அரசியலோ ஓர் இனத்தை - சமூகத்தை வழிநடத்துவது. மத முரண்பாடுகளின் மூலம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற நினைக்கும் சக்திகள் நிச்சயம் ஒரு குறிப்பிட்ட மதத்துக்கு மட்டுமே சார்பாக தொழில்படுவர். ஏனைய மதங்கள்மீது வெறுப்புணர்வையே ஏற்படுத்துவர்.

# சப்த கன்னிமார் ஆலயத்துக்கு தீர்த்தம் எடுப்பதற்கு அனுமதி

*முல்லைத்தீவு, ஜூன் 01*

*வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயத்துக்கு தீர்த்தம் எடுப்பதற்கு அனுமதி ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படும் என்று ஆலய நிர்வாகம் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பியிடம் உறுதி அளித்துள்ளார் முல்லைத்தீவு மாவட்ட தளபதி.*

*முல்லைத்தீவு - வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலய தீர்த்தம் எடுக்கும் பாதை மற்றும் ஆலய திருவிழாவின் இறுதி திருவிழாவான பரியமும் வழிவிடுதல் உற்சவம் என்பன மேற்கொள்ளும் இடங்கள் 2009ஆம் ஆண்டின் பின்னர் இராணுவத்தினரின் பிடிக்குள் அகப்பட்டன.*

*இதனால், ஆலயத்தின் தீர்த்தத் திருவிழாவில் ஒவ்வோர் ஆண்டும் மக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன.*

*இந்நிலையில், ஆலய நிர்வாகம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இந்த விடயத்தில் தலையிட்டு தீர்வு பெறப்பட்டுள்ளது.*

*நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட இராணுவ கட்டளை அதிகாரி மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் பாராளுமன்ற உறுப்பினர் ஆலயப் பகுதிக்கு சென்றனர்.*



*தீர்த்தம் எடுத்தல் பாதையின் முக்கியத்துவத்தை இராணுவத்துக்கு தெளிவுபடுத்திய தன் அடிப்படையில் தீர்த்தம் எடுப்பதற்கான அனுமதி இராணுவ மாவட்ட தளபதியால் வழங்கப்பட்டது. இந்த அனுமதி எழுத்து மூலமும் வழங்கப்படும் என்றும் மாவட்ட தளபதி உறுதியளித்தார். (ஐ)*



## முன்பள்ளி மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன

*வடமராட்சி, ஜூன் 01*

*புலம்பெயர் தமிழரான திருமதி மு. லலிதாவின் நிதி அனுசரணையில் கோப்பாய் பிரதேச தேசோதய சபை ஊடாக புத்தூர் கிழக்கு சிறீ விக்னேஸ்வரா முன்பள்ளி மாணவர்களுக்கு சீருடைகள் மற்றும் சத்துணவு பொதிகளும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.*

*கோப்பாய் பிரதேச தேசோதய தலைவர், இ. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலத்திரனியல் பொறியியளாளரும் சமாதான நீதிவானுமாகிய சா. தவசங்கரி ஏற்பாட்டாளர் தே. நமணதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.*

*இதே வேளை அப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உடைகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி சிறார்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-02)*

## சிறை இலக்கிய அனுபவ பகிர்வு

*வடமராட்சி, ஜூன் 01*

*அரசியல் கைதியாக 15 ஆண்டுகள் சிறையிலிருந்து விடுதலையான சிவ. ஆரூரன் தனது சிறை இலக்கிய அனுபவம் குறித்து பகிரும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வடமராட்சி - அல்வாய் கலை அகத்தில் எழுத்தாளர் இ. இராஜேஸ்கண்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.*

*'எனது இலக்கிய சிறை அனுபவங்கள்' என்ற தலைப்பில் இடம்பெறும் இந்த அனுபவப் பகிர்வு நடைபெறும்.*

*ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறையில் வாழ்ந்து கொண்டு அதிக படைப்புகளை வெளிக்கொண்டு வந்தவராக ஆரூரன் உள்ளார். சிறையில் இருந்தவாறே 9 நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். (ஐ-02)*

## கலந்துரையாடல்


*யாழ்ப்பாணம், ஜூன் 01*

*'மதப் பண்பாடுகளும் சமூக அசைவியக்கமும்' என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.*

*இந்தக் கலந்துரையாடலில் தொடக்க உரையை யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் மூத்த விரிவுரையாளர் தி. செல்வமனோகரன் ஆற்றவுள்ளார்.*

*தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் நடைபெறும். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுதுள்ளனர். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூன் - 01 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 18
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : திரையோதசி-




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வேலையாட்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும்.

**மிதுனம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். மறுக்கப் பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உங்களுக்கு பெரிய பொறுப்புகளை தேடி வந்து தருவார்கள். தைரியம் கூடும் நாள்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். மேலதிகாரி ஒத்துழைப்பு அதிகரிக்கும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

**துலாம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலை ஆட்களால் பிரச்னை வரும். மேலதிகாரிகளுடன் விவாதம் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். மதிப்புக் கூடும் நாள்.

**தனுசு**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். செல்வாக்கு உயரும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். நன்மைகள் பல நடக்கும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப்போகும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

# இலங்கையில் இருந்து தங்கம் கடத்திய இருவர் கைதாகினர்

இராமேஸ்வரம், ஜூன் 01

இலங்கையில் இருந்து 8 கிலோ தங்கத்தை கடத்தி வந்த இருவரை தமிழக கடலோர பொலிஸார் கைது செய்துள்ளனர். தங்கம் கடலில் வீசப்பட்ட நிலையில் அதனை கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இராமநாதபுரம் - இராமேஸ்வரம் இலங்கைக்கு அருகில் அமைந்துள்ளது. இதனால் கடல் வழியாக தங்கம், கஞ்சா, கடல் அட்டைகள், பீடி இலைகள் உள்பட பல்வேறு பொருட்களை கடத்தும் செயல்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. இந்தக் கடத்தலை தடுக்க விசேட கண்காணிப்பு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு இலங்கையில் இருந்து ஒரு படகில் தங்கம் கடத்தி வருவதாக இரகசிய தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து அதிகாரிகள் மண்டபத்தில் உள்ள இந்திய கடலோர காவல் படையினர் விசேட நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது, மண்டபத்துக்கும் வேதாளைக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் ஒரு நாட்டுப்படகு வந்து கொண்டிருந்தது. அதை நிறுத்துமாறு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர். அதிகாரிகளை பார்த்ததும் நாட்டுப் படகில் இருந்தவர்கள் ஏதோ ஒரு பொருளை கடலில் வீசினர்.

கடலோர காவல் படையினர் அந்த நாட்டுப்படகில் ஏறி சோதனை செய்தனர். அவர்களிடம் அங்கிருந்த இருவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் கடலில் வீசப்பட்டது தங்கம் என்று உறுதி செய்யப்பட்டது. 8 கிலோ தங்கம் கடலில் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனை மீட்கும் நடவடிக்கையில் கடலோரப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(ஐ)

# தினம் ஒரு பிரச்னையை மக்களுக்கு பரிசாக அளிக்கிறது தி. மு. க. ஆட்சி

## இப்படி சாடுகிறார் பழனிசாமி

சென்னை, ஜூன் 01

தினம் ஒரு புது பிரச்னையை மக்களுக்கு பரிசாகத் தரும் ஆட்சியாக தி. மு க. ஆட்சி உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

இது குறித்து தனது ருவிற்றர் பக்கத்தில், "தினம் ஒரு புது பிரச்னையை மக்களுக்கு பரிசாக தரும் இந்த தி. மு. க. ஆட்சியில், இரண்டு தினங்களுக்கு முன்பு தான் போக்குவரத்து கழக ஊழியர்கள், குறிப்பாக தி.மு.கவின் தொ.மு.சவினர் அறிவிக்கப்படாத திடீர் போராட்டத்தை நடத்தினர். அதிலிருந்து மீள்வதற்குள் பொதுமக்களுக்கு வழங்கப்படும் தண்ணீர் போதிய அளவில் வழங்கபடாதால் இன்று (நேற்று) மெட்ரோ குடிநீர் லாரிகளை இயக்குவோர் திடீர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்த ஆட்சியில் மக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கே பெரும் சிரமப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியிருப்பதும் இனி அடுத்தடுத்து என்ன போராட்டங்கள் வருமோ என்கிற அச்ச உணர்வு பொதுமக்களுக்கு ஏற்பட்டிருப்பதும் மிகுந்த வேதனைக்குரியது.

ஊரில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எதையும் அக்கறை கொள்ளாத, உல்லாசப் பயணம் முடித்து ஊர் திரும்பும் சர்க்கஸ் அரசின் பொம்மை முதல்வர், இனியும் காலம் தாழ்த்தாமல் மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளையாவது நிறைவு செய்ய வேண்டிய நடைமுறைகளை உடனடியாக மேற்கொள்ள கவனம் செலுத்த வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# கைது செய்தால்தான் போராட்டத்தை நிறுத்துவோம் என்று கூறுவது தவறு

## பா. ஜ. க. தமிழ்நாடு தலைவர் சொல்கிறார்

மதுரை, ஜூன் 01

மல்யுத்த வீராங்கனைகளின் முறைப்பாடு குறித்து விசாரணை நடைபெற்று வரும் நிலையில், முறைப்பாட்டுக்குரிய நபரை கைது செய்தால்தான் போராட்டத்தை நிறுத்துவோம் என கூறுவது தவறு என தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

"தி. மு. க. நண்பர்கள் வைரமுத்துவிடம் பாடகர் பாலியல் புகார் சம்பந்தமாக கேள்வி கேட்கட்டும். நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே எல்லா குற்றத்துக்கும் ஆதாரம் வேண்டும். விசாரணை நடந்து கொண்டிருக்கிறது குற்றம்சாட்டப்பட்டவரை கைது செய்தால் தான் போராட்டத்தை நிறுத்துவோம் என்பது தவறு" என கூறினார்.

நிதியமைச்சர் பி.டி.ஆரின் ஒலிப்பதிவை அடுத்து, துறை மாற்றம் செய்தது குறித்த கேள்விக்கு, "பி.டி.ஆர் அமைச்சரவை மாற்றம் செய்தது மதுரைக்கும், மதுரை மக்களுக்கும் செய்த துரோகம். ஐ. ரி. அதிகாரிகள் தாக்குதல் சம்பந்தமாக காவல் துறையினர் செந்தில் பாலாஜி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

(ஐ)

# தமிழ்நாட்டின் நிலை உயரும் என்ற நம்பிக்கையுடன் வருகிறேன்

## முதல்வர் ஜப்பானிலிருந்து அறிக்கை

சென்னை, ஜூன் 01

கடல் கடந்த பயணத்தால் தமிழ்நாட்டின் நிலை உயரும் என்ற நம்பிக்கையுடன் தமிழ்நாட்டுக்கு வருகிறேன் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளில் முதல்வர் மு. க. ஸ்டாலின் அரசு முறைப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றிரவு நாடு திரும்பினார்.

இந்தநிலையில், ஜப்பானிலிருந்து புறப்படும் முன்னர் அவர் விடுத்த அறிக்கையில், "பத்தாண்டு கால இருட்டை ஒவ்வொரு பகுதியாக விரட்டி, விடியலைத் தந்து கொண்டிருக்கிறது திராவிட மொடல் அரசு. இன்னும் சில பகுதிகளில் இருட்டு ஒளிந்து கொண்டிருக்கிறது. அதையும் விரட்டி ஒளி மிகுந்த தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதே நம் இலக்கு. அதனால்தான் கடந்த இரண்டு ஆண்டுகளில் தொழில்துறை சார்ந்த நிறுவனங்கள், முதலீடுகள் தொடர்பான நிகழ்வுகளில் அதிகமாகவும் ஆர்வமாகவும் பங்கேற்று வருகிறேன். தொழில்வளம் பெருக வேண்டும், வேலைவாய்ப்புகள் உயர வேண்டும். உற்பத்தி அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் பொருளாதார முன்னேற்றம் காண முடியும். அதற்காக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை திராவிட மொடல் அரசிற்கு ஆலோசனை வழங்கும் பொருளாதார வல்லுநர்கள் எடுத்துரைத்திருந்தனர். அதற்கமைய ஆயிரத்து 150 கோடி (இந்திய) ரூபாய் முதலீடுகளை ஈர்த்துள்ளோம்.

கடல் கடந்த பயணத்தால் தமிழ்நாட்டின் நிலை உயரும் என்ற நம்பிக்கையுடன் தமிழ்நாட்டுக்கு வருகிறேன் - என்றுள்ளது.

(ஐ)

# மருந்துப்பொருள்களின் விலைகள் விரைவில் குறைக்கப்படவேண்டும்

## சுகாதார அமைச்சர் பணிப்புரை



கொழும்பு, ஜூன் 01

**டொலரின் விலை வீழ்ச்சியுடன் ஒப்பிடும்போது, மருந்துகளின் விலையை மிக விரைவாகக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பணிப்புரை விடுத்துள்ளார்.**

**மேலும், மருந்துப் பொருட்களின் விலை குறைந்தது 15 வீதம் குறைக்கப்படவேண்டுமென அமைச்சர் சுட்டிக் காட்டினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சாரக் கட்டணம் அதிகரிப்பு, வங்கி வட்டி வீதம் அதிகரிப்பு போன்ற காரணிகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும். மேலும் நாட்டில் உள்ள அப்பாவி மக்களுக்கு நியாயமான விலையில் மருந்துகளை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

இதனடிப்படையில், அதற்கான உரிய திணைக்களங்கள் மற்றும் விலைக்குழு உள்ளிட்ட அதிகாரிகளுடன் அவசரமாக முடிவெடுக்கவேண்டும்.

அத்துடன், சர்வதேச மட்டத்தில் ஆய்வுகூடம் ஒன்றை நாட்டில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன் -என்றார். (அ)



# கலாசாலையில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 01

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகவும் சேவையாற்றி அரச பணியில் இருந்து ஓய்வு பெறும் சரா. புவனேஸ்வரனைக் கௌரவிக்கும் நிகழ்வு கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நேற்று கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கலாசாலை விரிவுரையாளர் க. அன்பரசி, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புதிய பொதுச் செயலாளர் சி. கணேசலிங்கம் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். நிகழ்வில் கலாசாலை சமூகத்தின் சார்பில் மணிவிழா நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. (அ)

# ஆடுகளுக்கு காப்பீட்டு திட்டம் மிகவிரைவில்

கொழும்பு, ஜூன் 01

ஆடுகளுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் தலைவர் டபிள்யூ. எம். எம்.பீ. வீரசேகர தெரிவித்தார்.

அதன்படி, விவசாயத்துறையுடன் தொடர்புடைய பல துறைகளுக்கு புதிய காப்புறுதி வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை தற்போது விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை ஆரம்பித்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் அவர் கூறினார்.

விவசாய அமைச்சுக்கு உட்பட்ட அனைத்து நிறுவனங்களின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில், விவசாய மற்றும் விவசாய காப்புறுதிச் சபையின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

கால்நடை முகாமைத்துவத்தில் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்குள் 70,000 ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஆடுகளுக்கு காப்புறுதி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வீரசேகர தெரிவித்தார்.

பொதுவாக ஒரு ஆட்டின் பெறுமதி சுமார் ஒரு இலட்சம் ரூபாவாகும்.

அதன்படி, ஆடுகளுக்கு வருடாந்த காப்புறுதிப் பங்காக 400 ரூபாவுடன் காப்புறுதி செய்ய வாய்ப்பு வழங்குவதுடன் ஆடுகள் திருட்டுப் போனாலோ அல்லது திடீர் மரணம் ஏற்பட்டாலோ அதிகபட்ச இழப்பீடு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஆடுகளை இலவசமாக வழங்கும் திட்டத்திற்காக இந்த ஆண்டு 150 மில்லியன் ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளது. (அ)

# புளியங்குளத்தில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 01

புளியங்குளம் - மதியாமடு பகுதியில் 38 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புளியங்குளம் - மதியாமடு பகுதியில் வசித்து வந்த கெ. சதீஸ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு தனது தோட்டத்துக்குச் சென்ற அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)



# ஒருங்கிணைப்பு கூட்டத்தில் 'யாழ்கோ'வின் பசுப்பால்!

யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் (யாழ்கோ) உற்பத்தியான பசுப்பால் வழங்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்தியாளர்களை மேம்படுத்தவேண்டும் என்ற யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரத்தின் கோரிக்கைக்கு இணங்க உள்ளூர் உற்பத்தியான யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பசுப்பால் நேற்று கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்டது. (அ)

# சட்டத்தரணிகள் சங்க தலைவரை சந்தித்தார் அமெரிக்கத் தூதுவர்

கொழும்பு, ஜூன் 01

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்யா நவரத்ன ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது நல்லாட்சியை நிலைநிறுத்துவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பங்கு மிகவும் முக்கியம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் தனது உத்தியோகப்பூர்வ ருவிட்டர் பக்க பதிவொன்றின் மூலம் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஒரு வலுவான சட்டத்துறை அனைத்துப் பிரஜைகளும் நீதியைப் பின்தொடர்வதை ஊக்குவிக்கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் நாட்டின் நீதியை நிலைநிறுத்துவதற்கான



வேலைத்திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

# ஒளிபரப்பு அதிகாரசபை சட்டத்தால் ஊடகங்களுக்கு இடையூறு ஏற்படாது

## கூறுகின்றார் நீதி அமைச்சர்

கொழும்பு, ஜூன் 01

ஊடக நிறுவனங்களுக்கு சட்டபூர்வமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதற்காகவும், ஊடக சமத்துவத்தை பேணுவதற்காகவுமே ஒளிபரப்பு வெளியீட்டு அதிகாரசபை சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனூடாக ஊடகங்களுக்கோ அல்லது சமூக வலைத்தளங்களுக்கோ இடையூறு ஏற்படுத்தப்படாது என நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒளிபரப்பு வெளியீட்டு அதிகாரசபைச் சட்டம், ஊடகக் கட்டுப்பாடு அல்லது சமூக வலைத்தளங்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதற்கானதல்ல.

தற்போதுள்ள ஊடக நிறுவனங்களுக்கு செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரம் இல்லை. அதற்கான தனியான சட்டங்கள் உருவாக்கப்படவில்லை. அதன் காரணமாகவே, சகல தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் தற்காலிகமான அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளோம்.

தொலைக்காட்சிக் கூட்டுத்தாபன சட்டத்தின் உறுப்புரையொன்றை பயன்படுத்தியே அந்த அனுமதிப்பத்திரங்களையும் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

ஒலிபரப்பு நிறுவனங்களுக்கும் தற்காலிக அனுமதிப் பத்திரங்களே வழங்கப்பட்டுள்ளன. அதுவும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உறுப்புரையொன்றை பயன்படுத்தியே அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் போது வழங்கப்பட்ட நிபந்தனைகளும் ஒவ்வொன்றும் வேறுபட்டவையாகும். இந்த விடயத்தில் சமத்துவம் பேணப்படவில்லை.

இந்நிலையிலேயே இந்தச் சட்டமூலத்தை கொண்டு வந்துள்ளோம். சட்டமூலத்துக்கான நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. அடுத்த வாரம் இதுதொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன.

சட்டபூர்வமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொடுப்பதற்காகவும் சகல நிறுவனங்களுக்கும் சமமான நிபந்தனைகளை வழங்குவதற்காகவுமே இது உருவாக்கப்படுகின்றது.

ஊடகங்களுக்கு வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்காகவே இது கொண்டுவரப்பட்டுள்ளது. ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதற்காக கொண்டுவரப்படவில்லை.

சகல ஊடக நிறுவனங்களுடனும் கலந்துரையாடியதன் பின்னரே சட்டமூலத்தை சமர்ப்பிப்போம்-என்றார். (அ)

# நீங்கள் அமைச்சராக உள்ள வரை மீனவர்களின் பிரச்னை தீராதோ?

## டக்ளஸைக் கேட்டார் சிறிதரன்

யாழ்ப்பாணம், ஜூன் 01

**நீங்கள் கடற்தொழில் அமைச்சராக இருக்கும்வரை இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்த முடியாதா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கிண்டலாக வினவினார்.**

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை தொடர்பில் நேற்று விவாதிக்கப்பட்டது.



குறித்த விவாதத்தில் கருத்துரைத்த சிறீதரன் எம்.பி., நீங்கள் கடற்தொழில் அமைச்சராக இருக்கின்றீர்கள். நீண்ட காலமாக ஒரே விடயத்தைத் திரும்ப திரும்பக் கூறுகின்றீர்கள். ஆனால் எந்த ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்த பிரச்னைக்கு தீர்வு காண முடியாதா? அல்லது நீங்கள் அமைச்சராக இருக்கும் வரை இதற்கு தீர்வு கிடைக்காதா? எனக் கிண்டலாகக் கூறினார். (அ)

# 'குமுதினி' திருத்த வேலை முடிவடையும் தறுவாயில்

## விரைவில் மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 01

தீவகத்திற்கான போக்குவரத்தில் முக்கிய பங்கு வகித்த குமுதினி படகின் திருத்த வேலை முடிவுறும் தறுவாயிலுள்ளதாகவும் அதற்கான கட்டணத்தை முழுமையாக மிகவிரைவில் செலுத்தி மக்கள் பிரயாணம் செய்வதற்கான உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழைப் பெற்று மீண்டும் பயணத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

இதேவேளை, கச்சதீவுப் பயணத்தின்போதும் படகுகளின் பாதுகாப்புத் தன்மை தொடர்பான பிரச்னைகள் ஏற்பட்டன. இப் பாதுகாப்பை உறுதிப்படுத்திச் சான்றிதழை வெளிநாட்டு நிறுவனங்களே வழங்குவதால் அதற்கான செலவு பெருமளவில் ஏற்படும். இதனால் படகு உரிமையாளர்களுக்கு இச் சான்றிதழை பெறுவதில் பிரச்னை ஏற்படுகின்றது.

நெடுந்தாரகை, எழுதாரகை போன்றவற்றை உடனடியாக இயக்கமுடியாத நிலை உள்ளது. இதற்கான நிதி வளம் கிடைக்கக் கூடியதாக இருந்தால் மீண்டும் இயக்கக்கூடியதாக இருக்கும்.

காரைநகர்-ஊர்காவற்துறைக்கிடையிலான இரும்புப் பாதைப் போக்குவரத்தானது பிரயாணத்திற்கு தகுதியற்ற நிலையிலுள்ளது. இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் கோரிக்கை விடுத்தார்.



வடதாரகை நெடுந்தீவு மக்களைப் புறக்கணித்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றஞ் சுமத்தியிருந்த நிலையில், இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி அடுத்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணித்தார். (அ)

# கொழும்பில் கார் மோதி 12 வயது சிறுமி மரணம்!

கொழும்பு, ஜூன் 01

கார் மோதியதில் 12 வயது சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு, கெஸ்பவே பிரதேசத்தில் நேற்று காலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமி தனது வீட்டிலிருந்து அருகிலுள்ள கடைக்குப் பொருட்களை வாங்கச் சென்றபோது வீதியால் அதிவேகத்தில் வந்த கார் அவர் மீது மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுமி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார்.

காரின் சாரதியான தனியார் வங்கி ஒன்றின் முகாமையாளரைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மக்களின் பிரச்னைகளை தீர்க்க அரசு முன்வரவில்லை

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 01

மக்களின் உண்மையான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வருவதில்லை என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே அவர் இந்த விடயத்தை கூறினார்.

அத்துடன் மக்களின் பொருளாதார அசௌகரியத்தை வேறு விடயங்களினால் தூண்டிவிட அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தினால் கிடைக்கப்பெறும் கடனுதவிகள் மூலம் பொருளாதார பிரச்னைகளை நிவர்த்தி செய்ய முடியும் என அரசாங்கம் முன்னதாக உறுதியளித்திருந்தது.

இருப்பினும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கப் பெற்ற போதிலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவில்லை- என்றார். (அ)

# கட்டாக்காலி நாய்களினால் யாழில் விபத்துகள் அதிகம்!

யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்.மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களின் அதிகரிப்பால் பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மாநகர சபை மட்டும் தனித்துச் செயலாற்ற முடியாதது. சமகாலப் பகுதியில் அனைத்து பிரதேச சபைகளும் இணைந்து செயலாற்றவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் இவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட கருத்தடை உள்ளிட்ட சிகிச்சைக்கு தேவைப்படும் பணத்தொகையை கூடுதலாக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென டக்ளஸ் தேவாநந்தா தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் கால்நடைகள் திருடப்படும் சம்பவம் அதிகரித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன் தெரிவித்தார்.

தனக்கும் இது தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் உரிய ஆதாரத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் என அபிவிருத்திக் குழுத் தலைவர் கூறினார்.

# கடவுச்சீட்டு பெறுவதில் மோசடி; வவுனியாவில் 10 பேர் சிக்கினர்!

வவுனியா, ஜூன் 01

வவுனியாவில் அமைந்துள்ள குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய காரியாலயம் முன்பாக 10 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா குடிவரவு மற்றும் குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்பாக வரிசையில் பணிக்கு ஊழியர்களை அமர்த்தி, வரிசையை பெற்றுக் கொடுப்பதற்கு 5000 ரூபாவும், வரிசையின்றி உரிய நடைமுறைகளுக்கு அப்பால் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுக்க 25000 ரூபாவும் இடைத் தரகர்களினால் பெறப்படுவதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் வவுனியாவில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்பாக வவுனியா பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தமது தேவைக்கு அல்லாது குறித்த பகுதியில் பணத்திற்காக வரிசையில் நின்றோர், சந்தேகத்திற்கிடமான முறையில் குறித்த காரியாலயம் முன்பாக இரவில் ஒன்று கூடி நின்றோர் என 10 பேர் கைது செய்யப்பட்டனர். (அ)

# வலி.வடக்கு பகுதியில் 540 வீடுகள் பயன்படுத்தப்படாத நிலையில்!

## யாழ். மாவட்ட அரச அதிபர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 01

வலி.வடக்கில் 540 வீடுகள் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளன. இவ் வீடுகளில் பாரதூரமான குற்றங்கள் இடம்பெறும் நிலையில் அவற்றைத் தடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் சிவபாலசுந்தரம் தெரிவித்தார்.

இதேவேளை, ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் வீட்டுத் திட்டங்களைப் பெற முயற்சிக்கும் பயனாளிகளின் பட்டியல் அதிகரித்துவரும் நிலை காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இளந்தொழில் முயற்சியார்களுக்காக காணி வழங்கப்படும் திட்டம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படாத நிலையிலுள்ளமை தொடர்பில் மேற்கொண்ட ஆய்வில், அனைத்து நேர்முகத் தேர்வுகளும் நிறைவடைந்து பயனாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விண்ணப்பதாரிகள் சாவகச்சேரி, மருதங்கேணி, நெடுந்தீவு மற்றும் கரவெட்டி பிரதேசங்களில் காணியை கோரியிருந்த நிலையில், சாவகச்சேரிப் பகுதியில் மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் பகுதிகள் வனவளத்துறையிடம் காணப்படும் நிலையில் நேற்று முன்தினமும் அளவை செய்துள்ளதாக சாவகச்சேரி பிரதேச செயளாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டோருக்கான காணிகளை அடையாளப்படுத்தியுள்ளதாக மருதங்கேனி பிரதேச செயளாளர் தெரிவித்தார்.

இயன்றவரை காணிகளை அந்தந்த பிரதேசத்திலுள்ள முயற்சியாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், இந்த மாத இறுதியில் அடுத்த ஒருங்கிணைப்புக் கூட்டம் இடம்பெறவுள்ள நிலையில் சாதகமான நடவடிக்கைகளை மேற்காள்ளுமாறும் யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (அ)

# யாழ். போதனா வைத்தியசாலையில் எலும்பு முறிவு சிகிச்சைகள் சிக்கலில்!

## சிறிதரன் எம்.பி சுட்டிகாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 01

**எலும்பு முறிவு சிகிச்சைகளை யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்வதில் பிரச்னை காணப்படுவதாகவும் குறித்த சிகிச்சைகளை தனியார் வைத்திய சாலைகளில் மிக வேகமாக பெறமுடிகின்றது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.**



யாழ். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த இரு வருடங்களாக இச் சிகிச்சை முறைகளுக்குரிய உபகரணங்கள், மருந்துகள் வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சால் வழங்கப்படவில்லை.

இச் சிகிச்சைக்காக காத்திருப்போரின் பட்டியலை பாராளுமன்ற உறுப்பினரிடம் ஒப்படைத்து புலம்பெயர்ந்தோர் மற்றும் சமூக நலனுள்ளோரின் உதவிகள் மூலம் நோயாளர்களின் சகிச்சைக்கு தேவையான நிதியுதியைப் பெற நடவடிக்கை எடுப்பதாகவும் யாழ். மாவட்ட போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி குறிப்பிட்டார்.

நோயாளர்களின் பெயர் விவரங்களை உள்ளடக்கிய இணையத்தளமொன்றை உருவாக்குவதன் மூலம் நோயாளர்களின் சிகிச்சைக்குரிய உதவிகளை மிகவேகமாக பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக் காட்டினார். (அ)

# வீதி விபத்துக்களினால் ஒரே நாளில் 10 பேர் பலி!

கொழும்பு, ஜூன் 01

இலங்கையில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. அந்தவகையில் நேற்று முன் தினம் மாத்திரம் மூன்று வயது குழந்தை உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பஹா-நீர்கொழும்பில் பாதசாரிகள் இருவரை லொறி மோதியதில் இருவர் சாவடைந்துள்ளனர். மூன்று வயது ஆண் குழந்தையும், அவரின் 29 வயதான தந்தையுமே இந்த விபத்தில் உயிரிழந்துள்ள னர்.

கண்டி-கம்பளையில் பஸ் மோதியதில் 60 வய தான பெண் ஒருவர் சாவடைந்துள்ளார். பஸ்ஸை விட்டு இறங்கி வீதியைக் கடக்க முற்பட்ட வேளை அவர் விபத்துக் குள்ளாகியுள்ளார்.

குருநாகல் - குளியாப்பிட்டியில் காரும் ஓட்டோ வும் நேருக்கு நேர் மோதியதில் ஓட்டோ சாரதி சாவடைந்துள்ளார். 42 வயதான குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

புத்தளம் - ஆனமடுவ, பெரியகுளம் பகுதியில் வான் மோதியதில் பாதசாரி ஒருவர் சாவடைந்துள்ளார். 68 வயதான வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - வெள்ளவத்தையில் தனியார் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் சாவடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற 28 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் - ஸ்வஸ்திபுர பகுதியில் வான் விபத்துக்குள்ளானதில் 76 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் பெண் ஒருவரும், ஆண் ஒருவரும், இரண்டு சிறுவர்களும் காயம டைந்துள்ளனர்.

களுத்துறை - பாணந்துறையில் ஓட்டோ கவிழ்ந்ததில் இருவர் சாவடைந்துள்ளனர். 33 வயதான ஓட்டோ சாரதியும், அதில் பயணித்த 41 வயதான பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

மொனராகலை - வெள்ளவாயவில் ஹைஏஸ் வான் மோதியதில் பாதசாரி ஒருவர் சாவடைந்துள்ளார். 72 வயதான வயோதிபரே உயிரிழந்துள்ளார். (அ)

# மாத்தளையில் காணாமல்போன யுவதி பாழடைந்த கிணற்றில் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜூன் 01

இரண்டு நாட்களாகக் காணாமல்போயிருந்த இளம் யுவதி ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தளை-ரத்தோட்டையில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி வீட்டிலிருந்து காணாமல்போயிருந்த 21 வயதுடைய குறித்த யுவதியை அவரின் குடும்பத்தினர் தேடி வந்திருந்த நிலையில், நேற்று முன் தினம் மாலை வீட்டுக்கு அருகிலுள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி பெற்றோருடன் முரண்பட்டிருந்த நிலையிலேயே வீட்டிருந்து காணாமல் போயிருந்தார் எனவும், அதன் காரணமாக அவர் காணாமல் போயிருந்த தகவலைப் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கவில்லை எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், யுவதி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ)

# மத நல்லிணக்கத்துக்கு எதிரான செயல்பாடு முழுமையான சுயாதீன விசாரணை தேவை!

## அருட்தந்தை சிறில் காமினி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 01

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் செயற்படுபவர்களின் பின்னணி தொடர்பில் வெளிப்படை தன்மையுடன் சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு, உண்மை கண்டறியப்பட வேண்டும் என்று கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடக பேச்சாளரான அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மத நம்பிக்கை மற்றும் மத தலைவர்களுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் பல நபர்களால் கருத்துகள் முன்வைக்கப்பட்டுவரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவ்வாறான சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இப்படியானவர்கள் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

இவ்வாறு பிரசாரம் செய்பவர்களுக்கு எதிரான பதிலடி என நினைத்துக்கொண்டு சிலர், எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் வகையிலான செயல்களில் ஈடுபடுகின்றனர். அவர்கள் செய்த தவறையே இவர்களும் செய்கின்றனர்-என்றார். (அ)

# மிருக வைத்தியர்களுக்கு நாட்டில் பற்றாக்குறை

கொழும்பு, ஜூன் 01

சுமார் 60 மிருக வைத்தியர்கள், இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், வெளிநாடு சென்றுள்ளதால், தமது தொழிற் துறையில் பாரிய பிரச்னை ஏற்பட்டுள்ளதாக, மிருக வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, இலங்கையில் அதிகளவு பால் உற்பத்தி இடம் பெறும் நுவரெலியா மாவட்டத்தின் 6 பிரிவுகளில், மிருக வைத்தியர்கள் இல்லை என அந்த சங்கத்தின் தலைவர் சிசிர பியசிறி தெரிவித்தார்.

அதேநேரம், வனஜீவராசிகள் மற்றும் விலங்கியல் பூங்கா திணைக்களத்திலும், மிருக வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பன்றிக்கு பரவும் வைரஸ் மனிதர்களுக்கு பரவாது!

கொழும்பு, ஜூன் 01

மேல் மாகாணத்தில் உள்ள சில பண்ணைகளில், பன்றிகளிடையே பரவும் வைரஸ் தொற்றானது, மனிதர்களுக்கு பரவக் கூடியதல்ல என மேல் மாகாண கால்நடை உறபத்தி, சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் கே.கே. சரத் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில், பன்றிகள் வளர்க்கப்படும் சில பண்ணைகளில், கடந்த 3 வாரங்களில், இந்த வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக, மேல் மாகாணத்தில் உள்ள பண்ணைகளில் இருந்து, வெளிப் பிரதேசங்களுக்கு பன்றிகளை கொண்டு செல்லும் போது, மிருக வைத்திய காரியாலயத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என அவர் அறிவுறுத்தினார். (அ)

# மன்னார் ஓட்டோ சங்க தலைவர் மீது தாக்குதல்

மன்னார், ஜூன் 01

மன்னார் மாவட்ட ஓட்டோச் சங்கத்தின் தலைவர் சசி என அழைக்கப்படும் சுப்பிரமணியம் சுவதீசன் (வயது-44) என்பவர் குழு ஒன்றினால் கடுமையாக தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து சுவதீசன் தெரிவிக்கையில்-

மன்னார் பஸ் தரிப்பிடத்துக்கு முன் உள்ள ஓட்டோ தரிப்பிட பகுதியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை சிலர் முரண்பட்டுக் கொண்டிருந்தனர்.

இவ்விடயம் குறித்து ஓட்டோ சங்கத் தலைவர் என்ற வகையில் மன்னார் பொலிஸாருக்கு தெரியப்படுத்த தொலைபேசி ஊடாக தொடர்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தேன்.

இதன்போது எமது சங்கத்தைச் சேர்ந்த 4 ஓட்டோச் சாரதிகள் மற்றும் அழைத்துவரப்பட்ட சுமார் 20 பேருக்கு மேற்பட்ட நபர்கள் என் மீது கொலை வெறித் தாக்குதலை மேற்கொண்டனர்.

எமது சங்கத்தின் முன்னாள் செயலாளரின் செயல்பாடு சரி இல்லாத நிலையில் அவர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார்.

முன்னாள் செயலாளருக்கு எதிராக ஓட்டோச் சங்கத்தினாலும் மன்னார் பொலிஸாரினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால் அவருடன் சேர்ந்த ஒரு சிலர் எங்களுடன் முரண்பட்ட நிலையில் இந்தத் தாக்குதலின் பின்னணியில் என்னுடன் முரண்பட்ட 4 ஓட்டோ ஓட்டுநர்கள் சுமார் 20 பேருக்கு மேற்பட்டவர்களை அழைத்து வந்து என்னைக் கடுமையாக தாக்கியுள்ளனர்.

தற்போது நான் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளேன்-என்றார்.

# தாய்லாந்து-இலங்கை பிரதமர்கள் சந்திப்பு

## வர்த்தகம்,முதலீடுகள் தொடர்பில் கலந்துரையாடல்

பாங்கொக், ஜூன் 01

தாய்லாந்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அந்நாட்டு பிரதமர் ஜெனரல் பிரயுத் ச்சான்-ஓ-ச்சாவை சந்தித்துள்ளார்.

பாங்கொக் நகரிலுள்ள அரச மாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் நிகழ்வை முன்னிட்டு, மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பிரதமர் உள்ளிட்ட 11 பேர் கொண்ட தூதுக்குழு நேற்று அதிகாலை தாய்லாந்து சென்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துதல், வர்த்தகம், முதலீடுகள் மற்றும் மத உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடுவது இந்த விஜயத்தின் நோக்கம் என பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் இரத்தினக்கற்களை மெருகூட்டுவதற்கும் விற்பனை செய்வதற்கும் தாய்லாந்து மிகச்சிறந்த சந்தை என தாய்லாந்து பிரதமர் பிரயுத் ச்சான்-ஓச்சா தெரிவித்துள்ளார். (அ)

# எர்துவான்: சிறு வயதில் ரொட்டி விற்றவர் இன்று துருக்கியின் அசைக்க முடியாத தலைவர்

பவுல் கிர்பி

துருக்கியில் எளிய பின்னணியில் இருந்து வந்த ரசீப் தய்யீப் எர்துவான் கடந்த 20 ஆண்டுகளில் அந்நாட்டின் அசைக்க முடியாத அரசியல் தலைவராக உருவெடுத்துள்ளார். நவீன துருக்கியின் தந்தையாக கருதப்படும் முஸ்தஃபா கெமல் அடாதுர்க்கிற்குப் பிறகு அந்நாட்டை மாற்றியமைத்த பெரும் தலைவராக அவர் திகழ்கிறார்.

சமீபத்திய ஆண்டுகளில் அடுத்தடுத்து நெருக்கடிகளைச் சந்தித்தாலும், அதையெல்லாம் மீறி தற்போது நடந்துள்ள அதிபர் தேர்தலில் அவர் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். வாக்கு எண்ணிக்கை முடிவை நெருங்கிய தருவாயில் அவர் வெற்றிக்குத் தேவையான 50 சதவீத வாக்குகளை கடந்துவிட்டார். இதன் மூலம் துருக்கியில் அவரது ஆட்சி மேலும் 5 ஆண்டுகள் நீடிப்பது உறுதியாகிவிட்டது.

கடந்த சில ஆண்டுகளாக அவர் பலவீனமான நிலையில் இருந்தார். அவரைத் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை எதிர்க்கட்சிகளுக்கு வந்திருந்தது.

துருக்கியில் மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவினம் அதிகரிக்க வழக்கத்திற்கு மாறான அவரது பொருளாதார கொள்கைகளும் ஒரு காரணம் என்று விமர்சகர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

துருக்கியை நவீனப்படுத்தி, வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றவர் என்ற பெருமையைப் பெற்ற எர்துவான், கடந்த பெப்ரவரியில் துருக்கியைத் தாக்கிய இரட்டை நிலநடுக்கத்திற்குப் பிறகு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் தொடங்குவதில் தாமதம் காட்டியதாகத் தோன்றியது.

2016-ம் ஆண்டில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் இருந்து தப்பிய பிறகு அவர் அதிபர் பதவியை கூடுதல் அதிகாரம் கொண்டதாக மாற்றிக் கொண்டார். எதிர்ப்பாளர்கள், தன்னுடன் முரண்படுபவர்கள் மீது கடுமையாக ஒடுக்கினார்.

2003-ம் ஆண்டு முதல் பிரதமர், 2014-ம் ஆண்டு முதல் அதிபர் என துருக்கியை தலைமை வகித்த 20 ஆண்டுகளில் அதனை பிராந்திய வல்லரசாக மாற்றியுள்ளார். இஸ்லாமிய கொள்கைகளை நிறுவுவதிலும் அரசியல் எதிர்ப்புகளை முறியடிப்பதிலும் வெற்றி கண்டார்.

நேட்டோ கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள நாட்டின் தலைவராக இருந்தாலும், யுக்ரேன் - ரஷ்யா போரில் தன்னை மத்தியஸ்தராக காட்டிக் கொண்டார். நேட்டோவில் சேர முயன்ற சுவீடனை காத்திருக்கச் செய்தார். அவரது ராஜதந்திர நடவடிக்கைகள் ஐரோப்பாவிலும் அதற்கு வெளியேயும் உள்ள கூட்டாளிகளை ஆத்திரமடையச் செய்துள்ளன.

துருக்கியில் மக்களை பிளவுபடுத்திவிட்ட அதிபர் எர்துவான், தேர்தலில் வெற்றியாளர் என்பது நிரூபணமாகிவிட்டது. ஆதரவாளர்கள் அவரை ரெய்ஸ் 'சீஃப்" என்று அழைக்கின்றனர்.

### எர்துவானின் எழுச்சி

1954-ம் ஆண்டு பெப்ரவரியில் துருக்கியின் கருங்கடல் பிரதேசத்தில் கடலோர காவல்படை அதிகாரியின் மகனாக தய்யீப் எர்துவான் பிறந்தார். அவருக்கு 13 வயதாக இருந்த போது, அவரது தந்தை இஸ்தான்புல்லுக்கு இடம் பெயர முடிவு செய்தார். அதன் மூலம் தனது 5 குழந்தைகளின் எதிர்காலத்தையும் சிறப்பானதாக்க முடியும் என்று அவர் நம்பினார்.

இளம் வயதில் எர்துவான் தனது செலவுக்கான பணம் ஈட்டுவதற்காக எலுமிச்சை ஜூஸ், ரொட்டி போன்றவற்றை விற்றுள்ளார். இஸ்தான்புல்லின் மர்மரா பல்கலைக்கழகத்தில் மேலாண்மையில் பட்டம் பெறுவதற்கு முன்பாக இஸ்லாமியப் பள்ளியில் அவர் பயின்றுள்ளார். கால்பந்து விளையாட்டிலும் அவர் சிறந்து விளங்கியுள்ளார்.

1970 மற்றும் 80 களில் இஸ்லாமியை வட்டத்தில் சுறுசுறுப்புடன் இயங்கிய அவர், இஸ்லாமிக் வெல்ஃபேர் கட்சியில் சேர்ந்தார். 1990-களில் அந்தக் கட்சி வேகமாக வளர்ந்ததன் பலனாக, 1994-ம் ஆண்டு இஸ்தான்புல் மேயராக எர்துவான் தேர்வு செய்யப்பட்டார். அடுத்த 4 ஆண்டுகள் இஸ்தான்புல் மேயராக அவர் பணியாற்றினார்.



இனரீதியாக வெறுப்பைத் தூண்டும் தேசியவாத கவிதையை பொதுவெளியில் வாசித்ததாக எழுந்த புகாரில் சிக்கியதால் அவரது மேயர் பதவிக்காலம் முடிவுக்கு வந்தது.

4 மாத சிறைவாசத்திற்குப் பிறகு அவர் வெளியே வந்த போது, நவீன துருக்கியின் மத சார்பற்ற கொள்கைகளை மீறியதாகக் கூறி அவரது கட்சி தடை செய்யப்பட்டிருந்தது.

2001-ம் ஆண்டு ஆகஸ்டில் அப்துல்லா குல்லுடன் இணைந்து இஸ்லாமியக் கட்சி ஒன்றை அவர் தொடங்கினார். அடுத்த ஆண்டிலேயே அவரது ஏ.கே.பி. (நீதி மற்றும் வளர்ச்சிக் கட்சி) கட்சி நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை இடத்தைப் பிடித்தது. 2003-ம் ஆண்டில் எர்துவான் பிரதமரானார். இன்று வரை அந்தக் கட்சியின் தலைவராக அவரே நீடிக்கிறார்.

### எர்துவான் ஆட்சியின் முதல் 10 ஆண்டுகள்

2003-ம் ஆண்டு முதல் 3 முறை அவர் பிரதமராக பதவி வகித்துள்ளார். இந்த ஆண்டுகளில் துருக்கியின் பொருளாதார வளர்ச்சி நிலையாக சிறப்பானதாக இருந்தது. சீர்திருத்தவாதி என்று உலக அளவில் பெயரெடுத்தார். துருக்கியில் நடுத்தர வர்க்கத்தினரின் எண்ணிக்கை அதிகரித்தது. லட்சக்கணக்கானோர் வறுமையின் பிடியில் இருந்து வெளியே வந்தனர். துருக்கியை நவீனப்படுத்த மிகப்பெரிய அளவிலான உள் கட்டமைப்புத் திட்டங்களுக்கு அவர் முன்னுரிமை கொடுத்தார்.

ஆனால், நாட்கள் நகரநகர எர்துவான் சர்வாதிகாரியாக மாறி வருவதாக விமர்சகர்கள் எச்சரித்தனர்.

2013-ம் ஆண்டு எர்துவானுக்கு எதிரான போராட்டக்காரர்கள் வீதியில் திரண்டனர். இஸ்தான்புல் நகரின் மையத்தில் உள்ள பூங்காவை மாற்றியமைக்கும் அரசின் திட்டம் இதற்கு காரணமாக அமைந்தாலும், அவரது சர்வாதிகாரத்தனமான ஆட்சி மீதான அதிருப்தியும் முக்கிய காரணமாக அமைந்தது. அப்போது பிரதமராக இருந்த எர்துவான், போராட்டக்காரர்களை கீழ் மக்கள் என்று விமர்சித்தார். அவரது அமைச்சரவை சகாக்கள் 3 பேரின் மகன்கள் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கினர்.

இந்தப் போராட்டம் எர்துவான் ஆட்சியின் திருப்புமுனையாக அமைந்தது. ஒரு மக்களாட்சிக் குடியரசாக அல்லாமல் ஓட்டோமான் பேரரசின் சுல்தான் போன்று அவர் செயல்படுவதாக எதிர்ப்பாளர்கள் குற்றம்சாட்டினர்.

எர்டோகன் தொடர்ச்சியாக 3 தேர்தல்களில் வெற்றிபெற உதவிய சமூக, கலாசார இயக்கத்தை நடத்தி வந்த பெத்துல்லா குலென் என்ற அமெரிக்க இஸ்லாமிய அறிஞருடனும் முட்டிக் கொண்டார். அந்த இயக்கம் ராணுவத்தை அரசியலில் இருந்து முற்றிலுமாக அகற்றுவதிலும் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தது. இது ஒட்டுமொத்த துருக்கி சமூகத்திற்கும் பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய பகையாகும்.

### இஸ்லாமிய கொள்கைகள் மீண்டும் அமல்

துருக்கியில் 1980-ம் ஆண்டு ராணுவப் புரட்சிக்குப் பிறகு அமலில் இருந்த, பொது இடங்களில் பெண்கள் தலையில் முக்காடிடுவதற்கான தடையை எர்டோகனின் கட்சி விலக்க முற்பட்டது. காவல்துறை, ராணுவம், நீதித்துறை ஆகியவற்றில் பணியாற்றிய பெண்களுக்கும் இந்த தடை நீக்கப்பட்டது.

முஸ்தபா கெமல் அடாதுர்க்கின் மத சார்பற்ற குடியரசு என்ற கொள்கைகளில் இருந்து எர்டோகன் விலகிச் செல்வதாக எதிர்ப்பாளர்கள் சாடினர். மத சார்பானவராக அறியப்பட்டாலும், இஸ்லாமிய விழுமியங்களை கட்டாயப்படுத்த விரும்பவில்லை என்பதை எர்டோகன் தெளிவுபடுத்தினார். அதேநேரத்தில், துருக்கியர்கள் தங்களது மத அடையாளங்களை வெளிப்படுத்துவதை ஆதரிப்பதாக அவர் கூறினார்.

விபசாரத்தை குற்றமாக்க வேண்டும் என்பதை அவர் தொடர்ந்து ஆதரித்தார். 4 குழந்தைகளின் தந்தையான அவர், எந்தவொரு முஸ்லிம் குடும்பமும் குடும்பக் கட்டுப்பாடு குறித்து பரிசீலிக்கவே கூடாது என்று வலியுறுத்தினார். 2016-ம் ஆண்டு தனது உரையில், நமது வம்சாவளியை பன்மடங்காக்குவோம் என்று அவர் குறிப்பிட்டார்.

தாய்மையைப் போற்றிய எர்டோகன், பெண்ணுரிமை ஆர்வலர்களை சாடினார். ஆணும், பெண்ணும் சமமாக நடத்தப்பட முடியாது என்று திட்டவட்டமாக கூறினார்.

இஸ்லாமிய கொள்கைகளை செயல்படுத்துவதில் வெற்றியாளராக பார்க்கப்பட்ட எர்டோகன், எகிப்தில் ஒடுக்கப்பட்ட முஸ்லிம் சகோதரத்துவத்தின் 4 விரல் வணக்கம் செய்ததற்காகவும் அறியப்பட்டார்.

2000-வது ஆண்டு ஜூலையில் இஸ்தான்புல்லில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஹாஜியா சோஃபியாவை மசூதியாக மாற்றும் நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வையிட்ட எர்டோகன் கிறிஸ்தவர்களின் கோபத்திற்கும் ஆளானார். 1,500 ஆண்டுகளுக்கு முன்பாக கத்தீட்ரலாக கட்டப்பட்ட ஹாஜியா சோபியா, ஓட்டோமான் பேரரசு காலத்தில் மசூதியாக மாற்றப்பட்டது. ஆனால், அதனை அருங்காட்சியகமாக முன்னிறுத்தி, மத சார்பற்ற துருக்கி குடியரசின் அடையாளமாக அடாதுர்க் மாற்றினார்.

### அதிகாரத்தில் தனது பிடியை இறுக்கிய எர்டோகன்

3 முறை பிரதமர் பதவியை வகித்த எர்டோகன் மீண்டும் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டதால் 2014-ம் ஆண்டு அதிபர் பதவிக்குப் போட்டியிட்டார். அதிகாரமில்லாத அலங்காரப் பதவியாக கருதப்பட்ட அதிபர் பதவிக்கு முதன் முறையாக நேரடி தேர்தல் நடைபெற்றது. ஆனால், அவரிடம் மிகப்பெரிய திட்டம் இருந்தது. புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கி, அதன் மூலம் ஒவ்வொரு துருக்கியரும் பயன்பெறச் செய்வதுடன், உலகின் முதல் 10 பொருளாதார நாடுகளில் ஒன்றாக துருக்கியை மாற்றுவேன் என்று அவர் உறுதியளித்தார்.

ஆனால், அதிபர் பதவியின் தொடக்கத்தில் 2 பெரிய நெருக்கடியை அவர் சந்தித்தார். 2015-ம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் அவரது கட்சி பெரும்பான்மையை இழந்தது. 2016-ம் ஆண்டில் துருக்கி சில தசாப்தங்களுக்குப் பிறகு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியை சந்தித்தது.

கடற்கரையோர ரிசார்ட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த அதிபர் எர்டோகனை பிடிக்கும் அளவுக்கு ராணுவத்தில் கிளர்ச்சி செய்த வீரர்கள் நெருங்கிவிட்டனர். ஆனால், விமானம் மூலம் அவர் பத்திரமாக அனுப்பி வைக்கப்பட்டார். ஜூலை 16-ம் தேதி அதிகாலையில் வெற்றியாளராக இஸ்தான்புல் விமான நிலையத்தில் ஆதரவாளர்கள் முன் அவர் தோன்றினார். கிளர்ச்சி செய்த ராணுவ வீரர்களுடனான சண்டையில் அப்பாவி மக்கள் 300 பேர் கொல்லப்பட்டனர்.

இஸ்தான்புல்லில் ஆதரவாளர்கள் பேரணி நடத்த, அரசுத் தொலைக்காட்சியில் உரையாற்றிய அதிபர் எர்டோகன் தன்னையே முதன்மைத் தளபதியாக அறிவித்துக் கொண்டார்.

குலென் இயக்கத்தினரே இந்த சதிச் செயலுக்குக் காரணம் என்று குற்றம்சாட்டப்பட்டது. சுமார் 1.5 லட்சம் அரசு ஊழியர்கள் இதனால் வேலையில் இருந்து நீக்கப்பட்டனர். ராணுவ வீரர்கள், பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள், காவல் துறை அதிகாரிகள், கல்வியாளர்கள், குர்திஷ் அரசியல்வாதிகள் என சுமார் 50 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.

எதிர்ப்பாளர்களை ஒடுக்கும் எர்டோகனின் நடவடிக்கை ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவில் எதிரொலித்தது. அந்த ஒன்றியத்தில் சேரும் துருக்கியின் விண்ணப்பம் பல ஆண்டுகளாக முன்னேற்றம் காணாமல் அப்படியே இருக்கிறது.

ஆனால், துருக்கி அதிபர் பதவியில் எர்டோகன் முன்னெப்போதையும் விட வலுவாக, பாதுகாப்பாக வீற்றிருக்கிறார்.

2017-ம் ஆண்டு அதிபருக்கே ஒட்டுமொத்த அதிகாரங்களையும் வழங்கிட வகை செய்யும் பொது வாக்கெடுப்பில் நூலிழையில்தான் அவர் வென்றார். அதன்படி, நாட்டில் நெருக்கடி நிலையை பிரகடனம் செய்வது, அரசு நிர்வாகத்தில் உயர் பதவிக்கு அதிகாரிகளை நியமிப்பது, நீதித்துறையில் தலையிடுவது போன்ற உச்சபட்ச அதிகாரங்கள் அதிபருக்கு கிடைத்தன.

ஓராண்டுக்குப் பிறகு நடைபெற்ற அதிபர் தேர்தலில் எளிதில் அவர் வெற்றி பெற்றார்.

துருக்கியின் சிறு நகரங்கள், கிராமங்கள் மற்றும் பழமைவாதிகளிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றவராக எர்துவான் திகழ்கிறார். 2019-ம் ஆண்டு தேர்தலில் துருக்கியின் மிகப்பெரிய நகரங்களான இஸ்தான்புல், தலைநகர் அங்காரா மற்றும் இஸ்மிர் ஆகிய மூன்றிலும் அவரது கட்சி தோற்றுப் போனது.

1990களில் எர்துவான் அலங்கரித்த இஸ்தான்புல் நகர மேயர் பதவியை பிரதான எதிர்க்கட்சியான குடியரசு மக்கள் கட்சியைச் சேர்ந்த ஏக்ரெம் இமாமோக்லுவிடம் இழந்ததை அவரால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

ஏக்ரெம் இமாமோக்லுவுக்கே அதிபர் தேர்தலில் வெற்றி பெற அதிக வாய்ப்புகள் இருப்பதாக கணிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டது. நீதிமன்றங்களைப் பயன்படுத்தி ஏக்ரெமை தேர்தலில் போட்டியிட விடாமல் செய்துவிட்டதாக எர்துவான் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டது.

துருக்கியின் மூன்றாவது பெரிய கட்சியான, குர்திஷ் ஆதரவு எச்.டி.பி. கட்சியும் குர்திஷ் கிளர்ச்சியாளர்களுடன் தொடர்பு இருப்பதாகக் கூறி நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து தடை செய்யப்படலாம் என்று அஞ்சியது. ஆகவே, வேறொரு பெயரில் தேர்தல் களம் காண அக்கட்சி முடிவு செய்தது.

துருக்கியின் முந்தைய அதிபர்களைப் போலவே எர்துவானும் தடை செய்யப்பட்ட குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி ஆதரவாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தார்.

சிரிய உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட 35 லட்சம் பேரை அகதிகளாக துருக்கி ஏற்றுக் கொண்ட போதிலும், எல்லை நெடுகிலும் குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதலும் நடத்தப்பட்டது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் நட்புறவைப் பேணும் எர்துவான், யுக்ரேன் - ரஷ்யா போரில் மத்தியஸ்தராக செயல்படவும் விழைந்தார்.

நேட்டோ உறுப்பினராக துருக்கி இருந்த போதிலும், ரஷ்யாவிடம் இருந்து ஏவுகணைகளை தாக்கி அழிக்கும் பாதுகாப்பு அமைப்பை அவர் வாங்கினார். துருக்கியின் முதல் அணு உலையைக் கட்டித்தர ரஷ்யாவை அவர் தேர்ந்தெடுத்தார்.

"சதிகள் மற்றும் இராணுவ ஆட்சிகளின் சகாப்தம் முடிந்துவிட்டது." என்பதே துருக்கி மக்களுக்கு எர்டோகன் விடுத்த செய்தி.

●

# பண்பாட்டுப் படுகொலை சாட்சியங்கள்:
# நெருப்பினில் கருகிய யாழ்.நூலகம் !
# தீயில் சாம்பரான ஓலை சுவடிகள் !!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



தமிழ்மக்களின் பண்பாட்டு அறிவுப்பெட்டகமாகவும், அணையாத அறிவாலயமாக மிளிர்ந்த யாழ் நூலகம் அரச பயங்கரவாத உச்சத்தில் 1981 ஜீன் 1 ஆம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்ட கொடூர நாளாகும்.

தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கியது இப்பொதுசன நூலகம். மேலும் சர்வதேச நூலக மட்டங்களுடனும் யாழ் நூலகம் சிறப்பான நிலையிலிருந்தது. அச்சியந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் இப்படியாக தொல்பொருள் நிலையம் போன்று யாழ் நூலகம் செயற்பட்டு வந்தது. நூலக காங்கிரஸில் யாழ் நூலகம் அங்கத்துவம் வகித்தது.

அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958, 1977, 1883 இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன.




இதன் தொடர்ச்சியாகவே யாழ். நூலகமும் தீக்கிரையானது.

இச்செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்ட செயலாகவே அமைந்தன. யாழ். எம்.பி.யின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், நகர வர்த்தக நிலையங்கள், ஆகியனவும் நாச்சிமார் கோவிலும் இக்கால வேளையிலேயே எரித்து நிர்மூலமாக்கப்பட்டன. இவ் எரிப்புகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ் பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்.

தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட



சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள், ஓலை சுவடிகளைக் கொண்ட அழகிய நூல்நிலையம் சிங்களப் பேரினவாதிகளால் எரிக்கப்பட்ட இச்சம்பவம் தமிழ்இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை உலகிற்கே வெளிப்படுத்தியது எனலாம்.

வரலாற்றுப் புகழ்வாய்ந்த யாழ் நூலகத்தின் மற்றோர் சிறப்பு அக்கட்டிடத்தின் சிற்ப அமைப்பே எனலாம். யாழ் நூலக கட்டிடம் தமிழரின் வரலாற்றுப் பொக்கிசமாகவே அனைவரையும் கவர்ந்தது.

அக்காலத்தில் இந்த நூல்நிலையம் எரிக்கப்பட்ட செய்தியை முற்றாக இருட்டடிப்புச்செய்ய ஜெ.ஆர். அரசாங்கம் முயற்சித்தது. இச் சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ விசாரணைக் குழு ஒரு கோடி ரூபா நட்ட ஈடுவழங்குமாறு அரசாங்கத்தைப் பணித்தபோதும் நட்ட ஈட்டுத் தொகையாக ஒரு ரூபாவைக்கூட வழங்க ஜே.ஆர். அரசாங்கம் முன்வரவில்லை.

இந்நூல் நிலைய எரிப்பு மூலம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மூட்டிய தீயின் வெம்மை இனவிடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உரமூட்டியது என்பதே உண்மை.

சர்வாதிகாரி, கொடூர ஹிட்லர் கூட தன் படைகளுக்கு இட்ட கட்டளைகளில் ஒன்று நூல் நிலையங்களை அழிக்கக்கூடாது என்பதாகும். ஆனால் ஜெ.ஆரின் படைகள் அதனையும் விட்டு வைக்காமல் எங்கள் அணையாத அறிவாலயத்தை எரித்து, மாறாத வரலாற்று வடுவை தமிழ்மக்கள் மனதில் ஏற்படுத்தினர்.

தமிழ் மக்களின் அரிய சொத்தாக யாழ் நூலகம் விளங்கியது. தமிழ் வாசகர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் நாடிச் செல்லும் ஒரு கேந்திர நிலையமாக அது அமைந்தது. தமிழ் மக்களின் தேசிய மேம்பாட்டின் அடையாளமாகவே யாழ் நூலகம் விளங்கியது.

தமிழர்மேல் எழுந்த ஆத்திரம், பகைமை, எரிச்சல் அவர்களுடைய சொந்த நூலகத்தின் மேலே அரச பயங்கர வாதத்தால் இந்நூலகம் தீக்கிரையானது. இவ்வாறான பண்பாட்டு மையங்களை அழித்து இன்னோர் இனத்தின் எரிச்சலுக்கும் பகைமைக்கும் கொடுமைக்கும் காலாயுள்ள கருத்தோட்டங்களைப் “பேரினவாதத்தின் உச்சக்கட்டம்” என்றே குறிப்பிடுவர்.

பெரும்பான்மையான ஓர்இனம் சிறுபான்மையினரை ஒடுக்கும் சிறுமையை நோக்கிய அவமானச் செயலாக



இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. இதற்காக மன்னிப்புக் கோரவோ நட்டஈடு வழங்கவோகூட முன்வராத ஜெ.ஆர் ஜெயவர்த்தனவும் அவரது படைகளும் பின்னரும் பல சிறிய நூலகங்களைச் சிதைத்தது கசப்பான வரலாறு தான்.

பண்பாட்டுப் படுகொலையின் அதி உச்சமான இக் கொடூர நிகழ்வை அகிலம் பூராக வெளிப் படுத்தப்படல் வேண்டும். மனித வாழ்வியத்தின் இழுக்கேடாக நிகழ்ந்த கலாச்சாரப் படுகொலையான யாழ் நூலகத்தின் எரிப்பினை தமிழ் மக்கள் என்றும் நினைவு கூர்ந்து கொள்வர். யாழ்நூலகம் எரிந்ததனை சந்ததி மறவாச் சரித்திரமாக வரலாற்றில் நிலைத்து நிற்கும்.

●

# யாழ்.நூலகம் வரலாறு

தமிழர்களின் கலாச்சாரம் இன்று கேள்விகுறியானாலும் சில பல இடங்களில் அது வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறது. யாழ் நூலகம் பற்பல கிடைத்தற்கரிய பழம்பெரும் நூல்கள் மற்றும் தமிழ் ஓலைச் சுவடிகள் நாழிதழ்கள், வார மாத இதழ்கள் துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய காலம் அது.

பல ஆர்வலர்களுடைய அயராத உழைப்பினாலும், பொது மக்களினதும், பல உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களினதும் தாராளமான ஆதரவினாலும் வளர்ச்சி பெற்றிருந்த எமது பண்பாடு, கலாச்சாரம் என்பவற்றிலும், கல்வியிலும் முக்கியம் வகிக்கும் யாழ் பொது நூலகம் பற்றி ஒரு நோக்கு..

**நூலக வரலாறு**

இந்த நிறுவனத்துக்கான கருப்பொருள் க.மு. செல்லப்பா என்னும் ஆர்வலரொருவரால் உருவாக்கப்பட்டது. இந்த செல்லப்பா அச்சுவேலியை சேர்ந்தவர், யாழ்ப்பான நீதி மன்றத்தில் கரியதரிசியாக இருந்தவர். அதாவது சக்கடத்தார். நவம்பர் 11. 1933 ஆம் ஆண்டில் தனது வீட்டில் சில நூல்களுடன் இவர் நடத்திவந்த நூல் நிலையமே இன்று விசாலமாக வளர்ந்துள்ளது. இதனைப் பலருக்கும் பயன்படும் வகையில் விரிவுபடுத்தும் நோக்கில் 1934ஆம் ஆண்டு ஆனி மாதம் 9ஆம் திகதி ஐசாக் தம்பையா அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றே பொது நூலகத்தின் தோற்றத்திற்கு அடிகோலியது.



இக்கூட்டக் காரியதரிசி திரு. க. மு. செல்லப்பா அவர்கள் சிரமப்பட்டுத் திரட்டிய 184 ரூபா 22சதம் தான் முன்னோடியான பொது நூலகம் ஒன்றிற்கான மூலதனமாய் அமைந்தது. அன்றைய காலத்தில் அது ஒரு பெரிய மூலதனம் தான். இதன் வழி ஆஸ்பத்திரி வீதியில் வாடக அறை ஒன்றில் 844 நூல்களுடனும் 36 பருவ வெளியீடுகளுடனும், 1934 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சிறியதொரு பொது நூலகம் வசதியின்றி இடர்ப்பட்ட போது அதனை யாழ்ப்பாணப் பட்டின சபை பொறுப்பேற்று 01-01-1935 இல் வாடி வீட்டிற்குத் தெற்கிலுள்ள மேல் மாடிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டு, அங்கே இயங்கி வந்தது.

சகல வசதிகளையும் கொண்ட நவீன பொது நூலகக் கட்டிடம் ஒன்றினை அமைப்பதற்கான முயற்சிகள் 1952ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் திகதி சாம் ஏ. சபாபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஒரு மகாநாட்டினை அடுத்து ஆரம்பிக்கப்பட்டன. புதிய நூலகக் கட்டிடடத்தை அமைப்பதில் அதி வண பிதா லோங் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வந்தார். அவர்களது முயற்சியின் மூலம் நூலகத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த கலாநிதி எஸ். ஆர். ரங்கநாதன் அவர்களின் ஆதரவும் கிடைத்தது.

நூலகத்தின் அமைப்பிற்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்க சென்னை அரசின் கட்டிடக் கலை நிபுணர் கே. எஸ். நரசிம்மன் அவர்கள் வந்து வரைபடங்களைத் தயாரித்து உதவினார். கட்டிட அடிக்கல்நாட்டு விழா 1953ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29ஆம் திகதி நடைபெற்றது. திராவிடக் கலயம்சம் பொருந்திய எழில் மிகு அறிவுக் கோயில் ஒன்று வெகு பொது மக்களின் நிறைவான ஆதரவுடன் உருப்பெற ஆரம்பித்தது.

பொது நூலகத்தின் முதற்கட்டம் பூர்த்தி செய்யப்பட்டு 11.10.1959ல் அதி விமரிசையாக திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நூலகத்தின் ஏனைய கட்டடடங்களும் பூர்த்தி செய்யப்பட்டன. பூரணத்துவம் பெற்று இயங்கி வந்த இந்நூலகத்தில் நூலகர் உட்பட 33 பேர் கடமையாற்றி வந்தார்கள்.

●

# நடஷா கருத்தை ஒளிபரப்பிய யூ-ரியூப் உரிமையாளர் கைது!

கொழும்பு, ஜூன் 01

நடாஷா எதிரிசூரியவின் பௌத்தத்துக்கு எதிரான கருத்துகள் தொடர்பில் எஸ். எல். வி. எல். ஓ. ஜி. யூ-ரியூப் உரிமையாளர் புருனோ திவாகா குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நடாஷா பௌத்தத்துக்கு எதிரான கருத்துகளை வெளியிடுவதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் புரூனோ திவாகர கைது செய்யபட்டுள்ளார்

நடாஷாவின் கருத்துகள் குறித்து புரூனோ திவாகரவிடம் 8 மணி நேரம் விசாரணை செய்தபின்னர் குற்றப் புலனாய்வு பிரிவினர் அவரை கைது செய்துள்ளனர்.

# போர் தளபாட தொழிற்சாலையை மேம்படுத்துவதற்கு அரசு திட்டம்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூன் 01

இராணுவ போர்க் கருவி தொழிற்சாலை அதன் சொந்த தொழில்நுட்பம் மற்றும் தொழில் நிபுணத்துவத்தை உபயோகித்து இராணுவத்தின் தேவைகளில் கணிசமானவற்றை உற்பத்தி செய்வதன் மூலம் நாட்டின் அந்நிய செலாவணியை சேமிப்பதில் இராணுவம் பெரும் பங்களிப்பை வழங்குவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் முக்கிய சொத்தாக கருதப்படும் இந்த வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும் பல்வேறு வகையான துப்பாக்கி ரவைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவ போர்க் கருவி தொழிற்சாலைக்கு நேற்று சென்றபோதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, இராஜாங்க அமைச்சருக்கு மேஜர் ஜெனரல் பிரியந்த வீரசிங்க மற்றும் இராணுவ போர்க் கருவி தொழிற்சாலையின் கட்டளைத் அதிகாரி பிரிகேடியர் ஆனந்த ஜயரத்ன ஆகியோர் போர்க் கருவி தொழிற்சாலையின் உற்பத்திப் பிரிவால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் மற்றும் உற்பத்திகள் குறித்து விளக்கமளித்தனர்.

இலங்கை இராணுவ போர் சேவைகள் பணிப்பாளர் பிரிகேடியர் ஜீ. ஏ. முனசிங்க மற்றும் மேற்படி நிலையத்தின் பொருப்பாளர் கேணல் கே.எம். ஏ. டபிள்வு. கே பேரேரா உட்பட இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ)

# யார் தலைவர் என்று தெரியாத நிலையில் தமிழ்த் தேசிய அரசியல் செல்கின்றது!

## முன்னாள் எம்.பி. அரியநேத்திரன்



மட்டக்களப்பு, ஜூன் 01

யார் தலைவர் என யாருக்கும் தெரியாத நிலையில் தமிழ் தேசிய அரசியல் சென்று கொண்டிருக்கின்றது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு மாவட்ட தொழில் சார் ஊடக சங்கம், மட்டு. ஊடக அமையம் இணைந்து படுகொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் 19ஆவது ஆண்டு நினைவேந்தல் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவு தூபியில்நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப் புலிகள் பிரிந்ததற்கு பின்னர் முதலாவதாக வேட்டுவைக்கப்பட்ட ஊடகவியலாளர் நடேசன் என பார்கின்றோம். 22 வருடங்களாக வீரகேசரி பத்திரிகையின் ஊடகவியலாளராக கடமையாற்றி வந்த அவரை இழந்திருக்கின்றோம்.

2000ஆம் ஆண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்குவதற்காக அவர் பாடுபட்டது 2001ஆம் ஆண்டு வெற்றியளித்தது.

இருந்தபோதும் 2009 விடுதலைப் புலிகள் போராட்டம் மௌனித்த பிற்பாடு இன்று நாங்கள் பார்க்கின்றபோது ஒரு தலைவரை ஒற்றைக் கதிரையில் பார்த்த நாங்கள் இப்போது 10 தலைவர்களை 10 கதிரையில் இன்று பார்க்கிறோம். அத்துடன், யார் தலைவர் என யாருக்கும் தெரியாத நிலையில் தமிழ் தேசிய அரசியல் சென்று கொண்டிருக்கின்றது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டத்துக்காக பல்வேறு தரப்பினர் போராடினாலும் கூட ஊடகவியலாளர்கள் பேனா முனையில் போராடியதன் நிமிர்த்தமாக பேரினவாதம் திட்டமிட்டு 46 ஊடகவியலாளர்களை படுகொலை செய்துள்ளது.

பிரேமதாஸ தொடக்கம் இப்போது உள்ள ஜனாதிபதி வரையில் ஜனாதிபதிகள் மாறியிருக்கலாம் - ஆட்சி மாறியிருக்கலாம். ஆனால், இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி இதுவரை கிடைக்காத சூழ்நிலையில் 19ஆவது ஆண்டு நினைவேந்தல் செய்துகொண்டிருக்கின்றோம். இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அரசாங்கம் நீதி வழங்க மாட்டாது. எனவே சர்வதேச மட்டத்தில் நீதி கிடைக்க வேண்டும் என கூறிவருகின்றோம்.

வட, கிழக்கில் பல ஊடகவியலாளர்கள் துணிந்து பல விடயங்களை வெளிக் கொண்டுவந்தாலும்கூட அவர்களுக்கும் அச்சுறுத்தல் இருந்து கொண்டிருக்கின்றது. பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு செல்லலாம் என்ற அச்சுறுத்தலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆகவே, சமாதானம் என்று சொல்கின்றவர்கள் - நாட்டில் யுத்தமில்லை என்று சொல்பவர்கள்- ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். யுத்தம் மௌனித்தாலும்கூட தமிழ் மக்களுக்கான நீதியான - நியாயமான ஒரு தீர்வு வரும் வரை நாங்கள் அச்சுறுத்தப்பட்ட ஓர் இனமாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய ஒரு சூழல் வேண்டுமாக இருந்தால் சர்வதேச சமூகம் இதனை கணக்கில் எடுத்து இணைந்த வட, கிழக்கில் சுயநிர்ணய உரிமையுடனான ஓர் அரசியல் தீர்வு கிடைக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்றார்.

(ஐ)






# மட்டக்களப்பில் போலி முகவர்கள்

## வெளிநாடு செல்பவர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஜுன் 01

**மட்டக்களப்பில் வெளிநாட்டு வேலைவாய்பு எனக்கூறி, போலி முகவர்கள் பலர், மக்களிடம் இலட்சக்கணக்கில் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஏமாற்றிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன.**

ஒரு மாத்தில் மட்டும் 4 முறைப்பாடு கிடைத்துள்ள நிலையில், போலி முகவர் ஒருவர் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆகவே போலி வெளிநாட்டு முகவர்கள் தொடர்பாக பொது மக்கள் அவதானமாகவும் விழிப்பாகச் செயற்படுமாறு மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கோரியுள்ளனர்.

வெளிநாடு செல்வதாக இருந்தால் மட்டக்களப்பு பொதுச் சந்தை கட்டடத்திலுள்ள அரச வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தை பொதுமக்கள் நாடவேண்டும் என்றும் பொலிஸார் கேட்டுக்கொண்டனர். (அ)

# வீதியில் யானைகள் அட்டகாசம்

திருமலை, ஜுன்.01

திருகோணமலை - ஹொரவப்பொத்தானை பிரதான வீதியில் யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

பிரதான வீதியின் இருமருங்கிலும் யானை வேலிகள் உள்ள போதிலும் அதனை உடைத்துக் கொண்டு யானைகள் வீதியில் வந்து நிற்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

யானைக் கூட்டங்கள் பகல் வேளையிலும் வீதியை நோக்கி படையெடுக்கின்றன.

இதனால் மாலைநேரங்களில் திருகோணமலை நகரிலிருந்து வேலைக்குச் சென்று வீடு செல்வோர் பீதியுடன் பயணிப்பதாக தெரிவிக்கின்றனர்.

காட்டு யானைகள் கிராமங்களுக்கு புகுந்து வாழை மற்றும் தென்னம் தோட்டங்களை துவம்சம் செய்து வருகின்றதோடு, கடந்த காலங்களில் இவ்வீதியில் மூன்று பேர் யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



# மாணவர் கற்கை வள நிலையங்கள் ஐந்து பாடசாலைகளில் திறந்துவைப்பு

அம்பாறை, ஜுன் 01

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், சம்மாந்துறை, இறக்காமம், நாவிதன்வெளி மற்றும் உகன ஆகிய ஐந்து பிரதேசங்களில் தலா 5 பாடசாலைகளில் மாணவர் கற்கை வள நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டு வருகிறது.

சுவாட் நிறுவனத்தினால் கெல்விற்றாஸ் நிறுவன நிதி உதவியுடன் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற செயற்திட்டத்தின் கீழ் வன்முறை தீவிரவாதத்திற்கு எதிராக மாணவர்கள் மீளெழும் திறனைக் கட்டியெழுப்பும் நோக்கில் இது நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இங்கு கணினி, பிறின்ரர், தளபாடங்கள், நவீன மாணவர் கதிரைகள், புத்தகங்கள், அலுமாரி முதலான பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சுவாட் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் க.பிறேமலதனின் வழிகாட்டலில் திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட கோரக்களப்பு சக்தி வித்தியாலயத்தில் மாணவர்கள் கற்கை வள நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வானது பாடசாலை அதிபர் வி.விமலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (அ)



# கிழக்கெங்கும் மரநடுகை

திருமலை, ஜுன் 01

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாணத்தில் சகல விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலும் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை மரநடுகை இடம்பெற்றது .

அந்த வகையில் காரைதீவு விவசாய போதனாசிரியர் காரியாலயத்தில் பிரதேச விவசாய போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன் தலைமையில் மரநடுகை இடம் பெற்றது.

தொழில்நுட்ப உதவியாளர் திருமதி வி.நிலக்ஷி பங்குபற்றுதலுடன் மரநடுகை வெற்றிகரமாக இடம்பெற்றது. (அ)

# காரைதீவில் டெங்கு ஒழிப்பு

காரைதீவு, ஜுன் 01

நாட்டில் ஏற்பட்டுள்ள டெங்கு நுளம்பு பெருக்கத்தை தடுக்கும் முகமாக காரைதீவு பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவு, அனர்த்த முகாமைத்துவப்பிரிவு மற்றும் உளவளப் பிரிவு உத்தியோகத்தர்களின் ஆதரவு மற்றும் பங்குபற்றலுடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையொன்று பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்றது.

கிராம உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்புடன் நேற்று முன் தினம். காரைதீவு 01 மற்றும் காரைதீவு 06 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் நடைபெற்றது.



இதன்போது ஆலயத்தை சூழவுள்ள வடிகான்கள் அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டன.

இச் சிரமதானத்தில் காரைதீவு பிரதேச செயலக அதிகாரிகள் பலரும் கலந்து ஆதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கல்முனையில் வீதியால் சென்றவர் மீது வாள்வெட்டு

அம்பாறை, ஜுன் 01

மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை வெட்டிக் காயப்படுத்திய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்ய கல்முனை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று-கல்முனை பிரதான வீதியில் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நபரை மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் கூரிய ஆயுதத்தினால் வெட்டிக் காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.




இச்சம்பவத்தில் 41 வயதுடைய இஸ்மாலெப்பை சிறாஜ்டீன் என்ற குடும்பஸ்தரே காயமடைந்துள்ள நிலையில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கல்முனை தலைமையக பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியுமான பிரதம பொலிஸ் பரிசோதகர் அலியார் றபீக் தலைமையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

# வடக்கு கொசோவோவுக்கு கூடுதலான துருப்புகளை அனுப்புகிறது நேட்டோ

ஒஸ்லோ, ஜுன் 01

**நேட்டோ 700 கூடுதல் துருப்புக்களை வடக்கு கொசோவோவிற்கு அனுப்புகிறது. அதன் அமைதி காக்கும் படையினரில் 30 பேர் செர்பிய இன எதிர்ப்பாளர்களுடனான மோதல்களில் காயமடைந்ததை தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**




செவ்வாயன்று நோர்வே பிரதமர் ஜோனாஸ் கர் ஸ்டோருடன் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர், ஒஸ்லோவில் செய்தியாளர்களிடம் நேட்டோ பொதுச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் கூறுகையில், “மேற்கு பால்கனுக்கான செயல்பாட்டு இருப்புப் படையில் இருந்து மேலும் 700 துருப்புக்களை அனுப்ப முடிவு செய்துள்ளோம். கூடுதலான ரிசர்வ் படைகளை அதிக தயார்நிலையில் வைப்போம். தேவைப்பட்டால் அவர்களும் அனுப்பப்படலாம்”- என்றார்.

கொசோவோவில் நேட்டோ தலைமையிலான அமைதி காக்கும் பணியில் தற்போது கிட்டத்தட்ட 3,800 துருப்புக்கள் ஈடுபட்டுள்ளன.

அல்பேனியர்கள் செர்பியாவின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்தபோது 1998 இல் கொசோவோவில் மோதல் வெடித்தது. இதையடுத்து செர்பியர்கள் மிருகத்தனமான ஒடுக்குமுறையுடன் பதிலளித்தனர். சுமார் 13,000 பேர், பெரும்பாலும் அல்பேனிய இனத்தவர்கள் இறந்தனர்.

1999 இல் நேட்டோவின் இராணுவத் தலையீட்டையடுத்து, கொசோவா பிரதேசத்திலிருந்து செர்பியாவை வெளியேற்றியது. இதை தொடர்ந்து, அங்கு அமைதி காக்கும் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

கொசோவோவின் 2008 சுதந்திரப் பிரகடனத்தை அங்கீகரிக்க செர்பியா மறுத்துவிட்டது. கொசோவாவில் அல்பேனிய இனத்தவர் மக்கள்தொகையில் பெரும்பகுதியைக் கொண்டுள்ளனர், ஆனால் கொசோவோ நாட்டின் வடக்கில் செர்பியாவை ஒட்டிய செர்பிய சிறுபான்மையினரைக் கொண்டுள்ளது.

கடந்த வார இறுதியில், கொசோவாவில் செர்பியர்கள் அதிகம் வாழும் பகுதி நகராட்சி கட்டடங்களுக்குள் அல்பேனிய இன அதிகாரிகள் நுழைந்ததை அடுத்து, சமீபத்திய பதற்றங்கள் அதிகரித்தன. செர்பிய எதிர்ப்பாளர்கள் அவர்களைத் தடுக்க முயன்றபோது, கொசோவோ பொலிஸார் கூட்டத்தை கலைக்க கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினர்.

பதிலுக்கு, செர்பியா நாட்டின் இராணுவத்தை மிக உயர்ந்த எச்சரிக்கை நிலையில் வைத்து கொசோவோவின் எல்லைக்கு மேலும் துருப்புக்களை அனுப்பியது.

திங்களன்று செர்பியர்கள் மீண்டும் எதிர்ப்புத் தெரிவித்தனர், அல்பேனிய மேயர்களும் கொசோவோ காவல்துறையும் வடக்கு கொசோவோவை விட்டு வெளியேறவேண்டும் என்று வலியுறுத்தினர்.

ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜோசப் பொரெல், கொசோவோ மற்றும் செர்பியாவின் தலைவர்களை உடனடியாக பதட்டங்களைத் தணிக்குமாறு வலியுறுத்தினார், மோதல்கள் “முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை” என்று கூறினார். (அ)

# எல்சால்வடோர் சிறையில் 153 கைதிகள் உயிரிழப்பு!

சன்சல்வடோ, ஜுன் 01

எல் சால்வடோரில் மார்ச் 2022 இல் அவசரகால அதிகாரங்கள் நிறுவப்பட்டதில் இருந்து அங்குள்ள சிறைச்சாலையில், குறைந்தது 153 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் குழுவான கிறிஸ்டோசல் வெளியிட்ட அறிக்கையொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் நான்கு பெண்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், உயிரிழந்தவர்கள் கைது செய்யப்பட்டபோது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்காக தண்டிக்கப்படவில்லை என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



இவ்வாறான மரணங்கள் சித்திரவதை மற்றும் கடுமையான காயங்களின் விளைவாக ஏற்பட்டுள்ளதாகவும், பாதிப் பேர் வன்முறையின் காரணமாக உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் உயிரிழந்தவர்களுக்கு மருத்துவ உதவி, உணவை வேண்டுமென்றே வழங்காமல் இருந்தமையால் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கடலுக்குள் வீழ்ந்தது வடகொரிய செய்மதி!

பியொங்யாங், ஜுன் 01

வட கொரியா நேற்று விண்வெளிக்கு அனுப்ப முயன்ற உளவுச் செய்மதி கடலில் வீழ்ந்துள்ளது.

இந்நிலையில் வட கொரியாவின் விண்வெளி முகவரகம் இது தொடர்பாக விடுத்த அறிக்கையொன்றில், இராணுவக் கண்காணிப்பு செய்மதியான மலிகயோங் 1 எனும் செய்மதியை சோலிமா-1 என்ற ரொக்கெட் மூல் ஏவியுள்ளது.

எனினும் இரண்டாவது கட்டத்தின் இயந்திரத்தின் அசாதாரண ஆரம்பம் காரணமாக இந்த ரொக்கெட் கடலில் வீழ்ந்ததாக அம்முகவரகம் தெரிவித்துள்ளது.

மேற்படி ரொக்கெட் பாகங்கள் சிலவற்றை தென் கொரியா கைப்பற்றியுள்ளது. (அ)

# நியூஸிலாந்தில் நிலநடுக்கம்

வெலிங்ரன், ஜுன் 01

நியூசிலாந்தின் தெற்கு கடற்கரையில், ஒக்லாந்து தீவுகளுக்கு அருகே நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

6.2 ரிச்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதழவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம தெரிவித்துள்ளது.

நியூசிலாந்தின் ஜியோநெட் கண்காணிப்பு நிறுவனம், நிலநடுக்கம் பூமியின் மேற்பரப்பில் இருந்து 33 கிலோமீற்றர் ஆழத்தில் பதிவானதாக தெரிவித்துள்ளது.

சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை எனவும் ,நிலநடுக்கம் உண்டான சேத விவரங்கள் குறித்து இன்னும் அறிவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# 2030 ஆம் ஆண்டுக்குள் நிலவுக்கு மனிதர்களை அனுப்ப சீனா திட்டம்

பீஜிங், ஜுன் 01


2030 ஆம் ஆண்டிற்குள் நிலவிற்கு மனிதர்களை அனுப்ப திட்டமிட்டுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

நிலவில் ஆய்வுகளை மேற்கொள்வது மட்டுமன்றி, வேற்று கிரகத்திற்கு மனிதர்களை அழைத்துச் செல்வதற்கான தொழில்நுட்ப சோதனைகளையும் மேற்கொள்வது இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

நிலவு உருவானது எவ்வாறு, அதில் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன என்பன தொடர்பான கூடுதல் விபரங்களை இந்த திட்டத்தின் மூலம் தெரிந்துகொள்ளலாம் என சீன விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் தொழில்நுட்பம் மிகப் பெரிய முன்னேற்றத்தை அடையும் என சீன விண்வெளி ஆய்வு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

நிலவிற்கும் பூமிக்கும் இடையே சுற்றுலாத் திட்டங்களை அறிமுகப்படுத்துவது, நிலவில் இருப்பிடங்களை அமைத்து மனிதர்கள் தற்காலிகமாகத் தங்குவது, இயந்திர மனிதர்களுடன் மனிதர்களும் இணைந்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்வது ஆகியவற்றுக்கு 2030-இல் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டம் அடித்தளம் அமைக்கும் என சீன விண்வெளி ஆய்வு மைய இணை பணிப்பாளர் லின் ஷிகியாங் கூறியுள்ளார்.



ஏற்கனவே நிலவிற்கு ஆளில்லாத விண்கலங்களை சீனா வெற்றிகரமாக அனுப்பியுள்ளது. நிலவில் நகர்ந்து சென்று ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஓர் ஆய்வுக் கலத்தையும் சீனா வெற்றிகரமாக தரையிறக்கியுள்ளது.

முன்னதாக, நிலவில் சர்வதேச ஆய்வு நிலையம் அமைக்க திட்டமிட்டிருப்பதாக கடந்த 2021 ஆம் ஆண்டில் ரஷியாவும், சீனாவும் கூட்டாக அறிவித்தன.

நிலவின் பரப்பிலோ அல்லது அதனை சுற்றி வரும் வகையிலோ அந்த சர்வதேச நிலவு ஆய்வு நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தை இரு நாடுகளும் மேற்கொண்டுள்ளன.

நிலவுக்கு முதன்முறையாக அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் கடந்த 1968-இல் விண்வெளி வீரர்களை அனுப்பியது. பின்னர் அப்பல்லோ-11 விண்கலத்தில் அனுப்பப்பட்ட நீல் ஆர்ம்ஸ்ட்ராங்கும் புஸ் ஆல்ட்ரினும் கடந்த 1969-இல் முதன்முறையாக நிலவில் தரையிறங்கினர்.

அதன் பிறகு அமெரிக்கா 6 முறை நிலவிற்கு விண்வெளி வீரர்களை அனுப்பியது. எனினும், 1972-ஆம் ஆண்டிற்கு பிறகு நிலவிற்கு மனிதர்களை அனுப்புவதை நிறுத்திய அமெரிக்கா, வரும் 2025-ஆம் ஆண்டில் மீண்டும் அத்தகைய திட்டத்தை செயல்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது.

இந்த சூழலில், சீனாவும் அது போன்ற திட்டத்தை தற்போது அறிவித்துள்ளது. சீனாவின் அந்த திட்டம் வெற்றி பெற்றால், நிலவிற்கு மனிதர்களை அனுப்பிய உலகின் இரண்டாவது நாடு என்ற பெருமையை சீனா பெறும். (அ)

# ஆப்கானுடனான ஒருநாள் தொடர் இலங்கை அணி அறிவிக்கப்பட்டது



கொழும்பு, ஜுன் 01

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக நடைபெறவுள்ள 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான 16 வீரர்களைக் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக சிறப்பாக விளையாடிய மதீஷ பத்திரண, டெஸ்ட் அணியின் தலைவர் திமுத் கருணாரட்ண, அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றில் விளையாட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள இலங்கை அணி அதற்கு முன்னதாக எதிர்கொள்ளும் ஆப்கானிஸ்தானுடனான தொடர் இலங்கைக்கு பலப்பரீட்சையாக அமையவுள்ளது.

அணியை தசுன் சானகவே வழி நடத்துவார். திமுத் கருணாரட்ன கடைசியாக மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக கடந்த 2021 மார்ச் 14ஆம் திகதி விளையாடியிருந்தார். அதன் பின்னர் ஒரு நாள் அணியில் அவர் இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும். அவர் பெரும்பாலும் ஆரம்ப வீரராக விளையாடுவார் என நம்பப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் கடந்த வருடம் நடைபெற்ற ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு எதிரான இருபது 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின்போது உபாதைக்குள்ளாகி சிகிச்சையுடன் ஓய்வுபெற்று வந்த இலங்கையின் பிரதான வேகப்பந்துவீச்சாளர் துஷ்மந்த சாமீர மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

29 வயதான சகலதுறை வீரர் துஷான் ஹேமந்த முதல் தடவையாக இலங்கை அணியில் இடம்பெறுகின்றார். உள்ளூர் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் 1000க்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்துள்ள துஷான் ஹேமந்த, 64 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார்.

சுழல்பந்துவீச்சு சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க டி சில்வா, அண்மையில் ஐ. பி. எல். தொடரில் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். எனினும் அவரது பெயர் அணியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி: தசுன் சானக (தலைவர்), பதும் நிசங்க, திமுத் கருணாரட்ன, குசல் மெண்டிஸ் (உதவித் தலைவர் - விக்கெட் காப்பாளர்), அஞ்சலோ மெத்யூஸ், சரித் அசலங்க, தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்ரம (விக்கெட் காப்பாளர்), சாமிக கருணாரட்ன, துஷான் ஹேமந்த, வனிந்து ஹசரங்க டி சில்வா, லஹிரு குமார, துஷ்மந்த சமீர, கசுன் ராஜித, மதீஷ பத்திரண, மஹீஷ் தீக்ஷன.



## நான் அதிர்ஷ்டசாலி அம்பதி ராயுடு உருக்கம்

சென்னை, ஜுன் 01

ஐ. பி. எல். தொடரில் குஜராத் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியுடன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நடுவரிசை துடுப்பாட்ட வீரரான அம்பதி ராயுடு ஆனந்த கண்ணீருடன் ஓய்வு பெற்றார்.

அவர் கூறும்போது, "இது ஒரு விசித்திர முடிவு. எனது கடைசி ஆட்டத்தில் இதற்கு மேல் எதையும் நான் கேட்டிருக்க முடியாது. சிறந்த அணிகளில் விளையாடியதற்கு நான் அதிர்ஷ்டசாலி. என் வாழ்நாள் முழுவதும் என்னால் சிரிக்க முடியும்" என்றார்.



## பாகிஸ்தானை சமரசப்படுத்தும் முயற்சியில் சர்வதேச கிரிக்கெட் சபை!

டுபாய், ஜுன் 01

உலகக் கிண்ணத்துக்கு முன்பாக பாகிஸ்தானில் நடைபெறும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்காக இந்திய அணி, பாகிஸ்தான் வர மறுத்தால், பாகிஸ்தான் அணியும் உலகக் கிண்ணத் தொடருக்கு இந்தியா செல்லாது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் நஜீம் சேத்தி கூறியுள்ளார். இதையடுத்து, சிக்கல் உருவாகியுள்ளது.

இந்த விடயம் குறித்து பேச்சு நடத்துவதற்காக ஐ. சி. சியின் தலைவர் உள்ளிட்ட உயர்மட்ட தூதுக் குழு லாகூருக்கு சென்றுள்ளனர்.

பாகிஸ்தான் அணி உலகக் கிண்ணத்தில் பங்கேற்க வேண்டும் என்றால் போட்டிகளை நடுநிலை மைதானங்களில்தான் வைக்க வேண்டும். அப்படித்தான் பாகிஸ்தானில் நடக்கும் போட்டிகளுக்கு இந்திய கிரிக்கெட் சபை கோரியது என்றும். இதேபோன்றுதான் பாகிஸ்தான் அணியும் ஆடும் என்று நஜீம் சேத்தி திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இது ஐ. சி. சிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

உலகக் கிண்ணத் தொடரை நடுநிலை மைதானங்களுக்கு மாற்றாவிடின் பாகிஸ்தான் நிச்சயம் பங்கேற்காது. பாகிஸ்தானில் ஆசியக் கிண்ணத்தை நடத்த முடியாது எனில், அது உலகக் கிண்ணத்தை தொடரிலும் விளைவுகளை தாக்கங்களை ஏற்படுத்தும் என்று நஜீம் சேத்தி கூறியதோடு, இந்தியா இங்கு நடக்கும் தொடர்களுக்கு நடுநிலை மைதானம் கோருவதும், அதே தாங்கள் நடத்தும் உலகக் கிண்ணத்துக்கு பாகிஸ்தான் இந்தியாவுக்கு வந்து ஆட வேண்டும் என்ற ஒற்றை நிலைப்பாட்டை ஏற்க முடியாது என்றும் பாகிஸ்தான் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரும் இரட்டை நடுநிலை மைதானங்கள் என்ற மொடல் ஏற்கப்பட்டால், உலகக் கிண்ணத்துக்கும் பாகிஸ்தான் தங்கள் போட்டிகளுக்கு நடுநிலை மைதானங்களைக் கோரும், இதை சமாளிப்பதுதான் இப்போது ஐ. சி. சியின் மிகப்பெரிய தலையிடி.

எனவே, ஐ. சி. சி. அதிகாரிகள் தற்போது லாகூருக்கு வந்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் பேச்சு நடத்த விருப்பதாக தெரிகிறது. மேலும் ஆசியக் கிண்ணம், உலகக் கிண்ண விவகாரத்தில் இந்திய கிரிக்கெட் சபை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடையே ஏற்படும் மாறுபட்ட நிலைப்பாட்டை சரி செய்வதற்கு இரு தரப்பிலும் பேச்சு நடத்த ஐ. சி. சி. தயாராகி வருகிறது. (ஐ)



## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் அடுத்த சுற்றில் ஸ்வியாரெக்

பாரிஸ், ஜுன் 01

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் அடுத்த சுற்றுக்கு ஸ்வியாரெக் முன்னேறியுள்ளார்.

4 வகையான கிராண்ட்ஸ்லம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் போட்டி ஆண்டுதோறும் நடந்து வருகிறது. இதில் இரண்டாவதாக நடைபெறும் பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் தொடங்கி நடைபெற்று வருகிறது.

முதல் சுற்று போட்டியில் கஜகஸ்தான் வீராங்கனை எலீனா ரிபாகினா, செக் வீராங்கனை பிரெண்டாவுடன் மோதினார்.

இதில், ரிபாகினா 6-4, 6-2 என்ற செற் கணக்கில் வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றோர் ஆட்டத்தில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாரெக், ஸ்பெயின் வீராங்கனை கிறிஸ்ரினாவுடன் மோதினார். இதில் ஸ்வியாரெக் 6-4, 6-0 என்ற செற் கணக்கில் எளிதில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் மெத்வதேவ் அதிர்ச்சி தோல்வி!

பாரிஸ், ஜுன் 01

உலகின் இரண்டாம்நிலை வீரரான ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான சுற்றுப் போட்டி நடக்கிறது.

இதில், உலகின் இரண்டாம் நிலை வீரரான ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ், 172ஆம் நிலை வீரரான பிரேசிலின் டியாகோ செபோத் வைல்டுடன் மோதினார். முதல் செற்றை டியாகோ 7-6 என கைப்பற்றினார்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது செட்டை மெத்வதேவ் 7-6, 6-2 என வென்று பதிலடி கொடுத்தார். இதையடுத்து சுதாரித்துக் கொண்ட டியாகோ 4 மற்றும் 5வது செற்றை 6-3, 6-4 என வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

சுமார் 4 மணி 15 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் உலகின் இரண்டாம் நிலை வீரரான மெத்வதேவ் முதல் சுற்றில் தோல்வி அடைந்து வெளியேறினார். (ஐ)



# அமைச்சரவையில் சில முட்டாள்கள்!

## ஆளும் கட்சி எம்.பி. குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூன் 01**

**"அமைச்சரவையில் சில முட்டாள்கள் இருக்கின்றனர். அவர்கள் மக்கள் ஆணை பெறாதவர்கள். அப்படியானவர்கள் தன்னிச்சையாக செயற்படுகின்றனர்."-என்று பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவின் தற்போதைய நிலைப்பாடு குறித்து எனக்குத் தெரியாது. எனினும், வெறுமனே அரசில் அமர நான் தயாரில்லை. ஜனாதிபதியுடனோ அல்லது அவரின் பெரும்பான்மை அரசுடனோ எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், அமைச்சரவையில் தற்போது சில முட்டாள்களே இருக்கின்றனர்.



அம்பாறை மாவட்டத்தில் பொதுஜன பெரமுன கட்சியைக் கட்டியெழுப்பவும், தேர்தல் வெற்றியைப் பெற்றுக்கொடுக்கவும் அயராது உழைத்தேன்.

வடக்கு, கிழக்கில் எனது மாவட்டத்தில் மட்டும்தான் மொட்டு கட்சிக்கு சிறந்த வெற்றி கிடைத்தது- என்றார். (அ)

# நடமாடும் மோர் விற்பனை வடமராட்சியில் ஆரம்பம்

வடமராட்சி. ஜூன் 01

கரவெட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தற்போதைய வெப்பநிலையைக் கருத்திற் கொண்டு நடமாடும் மோர் விற்பனையை ஆரம்பித்துள்ளது.

பால் சேகரிக்கப்படும் பெரிய கான்களில், தினமும் காலையில் தயாரிக்கப்படும் மோர் நெல்லியடி-பருத்தித்துறை வீதியில் மாலிசந்தி வைரவர் கோவில் அருகில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஒரு பெரிய பிளாஸ்ரிக் கப் மோர் 60 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வீதியால் வருவோர், போவோர் உயரிய வெப்பநிலை உடலில் தாக்கத்தை ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு பெரு ஆர்வத்துடன் மோரை வாங்கிக் குடித்து வருகின்றனர்.

இச்சங்கத்தின் விற்பனை நிலையங்களில் வைத்து கால்நடை வளர்ப்போரிடமிருந்து பெறப்படும் பாலில் இருந்து மோர் சுத்தமாகத் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. தெருவோரத்தில் வைத்து விற்கப்படும் மோர் ஒருசில மணி நேரத்திற்குள் விற்றுத் தீர்ந்து விடுகிறது. தினமும் காலை 9 மணிமுதல் 12 மணிக்குள் இதன் விற்பனை இடம்பெற்று வருகிறது. (அ-02)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல்வேறு உதவித் திட்டங்கள்

வடமராட்சி, ஜூன் 01

யாழ்ப்பாணம் வடமராட்சி செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் நேற்று முன்தினம் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

வவுனியா வடக்கு அனந்தர் புளியங்குளம், சின்னப்பூவரசங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள சிறி நாகதம்பிரான் ஆலயம், சிறி நாக கண்ணகையம்மன் ஆலயங்களின் கட்டடப் பணிக்காக ரூபா ஒரு இலட்சம் ரூபா நிதியும்,

முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு பிரதேசத்தில் வசிக்கின்ற பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு கழிப்பறை திருத்த வேலைக்காக 50,000 ரூபா நிதியும், மின்சார இணைப்புக்காக 30,000 ரூபா நிதியும், கிளிநொச்சி-உமையாள்புரம் உமாமகேஸ்வரர் தேவஸ்தானத்துக்கு கட்டடத் திருப்பணிக்காக 2ஆம் கட்டமாக 50,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டன.



இந்த செயற்றிட்ட உதவிகளைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தனது தொண்டர்கள் சகிதம் நேரடியாகச் சென்று வழங்கினார். (அ-02)

# தாயும் மகளும் வெட்டிக்கொலை!

## இரத்தினபுரியில் கொடூரம்

கொழும்பு, ஜூன் 01

தாயும் மகளும் வீட்டில் வைத்துக் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இரத்தினபுரி - காவத்தையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

45 வயதான தாயும், 22 வயதான மகளும் வீட்டில் தனியாக வசித்து வந்த நிலையில் இவ்வாறு வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார், 28 வயதுடைய இளைஞர் ஒருவரைச் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

கொலைச் சந்தேகநபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# அரசியலில் வீழ்ச்சியடைந்துள்ள சிலர் மீளெழ மதவாதத்தை தூண்டுகின்றனர்

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

"அரசியலில் வீழ்ச்சி கண்டுள்ளவர்கள் மத அடிப்படைவாதத்தை தூண்டிவிட்டு அதன்மூலம் மீண்டெழுவதற்கு முயற்சிக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்."

-இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நபரொருவருக்கு தாம் விரும்பும் மதத்தை பின்பற்றும் உரிமை உள்ளது. இது அரசமைப்பில் உள்ள ஏற்பாடு. எனினும், அந்த உரிமையை பயன்படுத்தி மற்றைய மதங்களை தாக்கக்கூடாது. ஆனால் சில காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தாம் கடைப்பிடிக்கும் மதம்தான் சிறந்தது என்று பிரசாரங்கள் முன்னெடுப்படுவதாலேயே மத அடிப்படைவாத பிரச்னைகள் உருவாகின்றன.

மத அடிப்படைவாதம் ஊடாக தமது கட்சிகளைப் பலப்படுத்தி கொள்வதற்கும், சரிந்துள்ள தமது செல்வாக்கைக் கட்டியெழுப்பி கொள்வதற்கும்



சிலர் முற்படுகின்றனர். இனத்துக்கு அச்சுறுத்தல், மதத்துக்கு அச்சுறுத்தல் எனக்கூறிக்கொண்டு அவர்கள் வரலாம். ஒரு கட்டத்தில் தேசப்பற்றைப் பயன்படுத்தலாம். மற்றுமொரு சந்தர்ப்பத்தில் மதத்தை முன்னிலைப்படுத்தலாம். சிலவேளை, இனவாதம் பேசலாம். சில குழுக்களின் செயற்பாடுகள் இதுவாகத்தான் உள்ளது.-என்றார். (அ)

# டெங்கு நோயின் தாக்கத்திலிருந்து இலங்கை இன்னும் மீளவேயில்லை

## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 01

ஒப்பீட்டளவில் மழை குறைந்துள்ளபோதிலும், டெங்கு நோயின் தாக்கத்தில் இருந்து இலங்கை மீளவில்லை என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் இந்துனில் போபிட்டிய தெரிவிக்கையில்-

அடுத்த இரண்டு மாதங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால், ஓகஸ்ட் மாதம் வரை இலங்கை இந்த நிலை தொடரும்.

இயற்கையில் ஏடிஸ் நுளம்பின் சராசரி ஆயுட்காலம் இரண்டு வாரங்கள். நுளம்பு அதன் வாழ்நாளில் மூன்று முறை முட்டையிடும், ஒவ்வொரு முறையும் சுமார் 100 முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த சூழலில், நாட்டில் கண்டறியப்படாத இனவிருத்தி செய்யும் இடங்கள் ஏராளமாக உள்ளன. இதனால் அதிக நோய்த்தொற்றுகள் ஏற்படக்கூடும்.

எனவே, டெங்குவைத் தடுக்கும் வகையில் மக்கள் தமது சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்திருக்கவேண்டும்-என்றார். (அ)

# கடனட்டை பாவனை வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 01

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் கடன் அட்டை பாவனையாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த 2022ஆம் ஆண்டு இறுதியில் கடன் அட்டை பயனாளர்களின் எண்ணிக்கை 19 இலட்சத்து, 52 ஆயிரத்து 991 ஆக காணப்பட்டது.

எனினும், இந்த வருடத்தின் கடந்த மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதியில் கடன் அட்டை பாவனையாளர்களின் எண்ணிக்கை 19 இலட்சத்து 39 ஆயிரத்து 541 ஆக குறைவடைந்துள்ளது. (அ)

# வர்த்தகத்தை வலுப்படுத்த ஆஸியின் ஆதரவைக் கோருகின்றது இலங்கை

கொழும்பு, ஜூன் 01

வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்த அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவை இலங்கை வரவேற்றுள்ளது.

அதன்படி, இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் போல் வெஸ்லி ஸ்டீபன்ஸுடனான சந்திப்பின்போது, பொருளாதார சீர்திருத்தங்கள், சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் கடன் நடைமுறைகள் குறித்து கலந்துரையாடியதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் அவுஸ்திரேலிய தனியார் துறையினரின் ஆர்வத்தை கவனிப்பதில் மகிழ்ச்சியடைவதாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## ஊடகங்களை...

கொடுக்கக்கூடிய விடயங்களும் ஆணைக்குழுவின் விடயதானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பு சட்டம், அமைதிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஒளிபரப்பு சேவைகள் முன்னெடுக்கப்படுவதை ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவே உறுதி செய்ய வேண்டியுள்ளது. தேசிய பொருளாதாரத்துக்கு அழுத்தம் ஏற்பாடாத வகையில், ஒளிபரப்பு சேவைகளை பேணிச் செல்வதும் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். மக்களுக்கு உண்மையான மற்றும் சரியான தகவல்கள் பெற்றுக்கொடுக்கப்படுவதையும் ஆணைக்குழு உறுதிப்படுத்த வேண்டும் என இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒளிபரப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் அதிகாரத்தையும் இலத்திரனியல் ஒளிபரப்பு சேவை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தையும் புதிய ஆணைக்குழுவிற்கு வழங்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. சமூக, கலாசார பெறுமதிகள் பாதுகாக்கப்படும் வகையில், மக்கள் மத்தியில் உளநல, ஆன்மீக பண்புகளை மேம்படுத்துவதற்காக ஆணைக்குழு இலத்திரனியல் ஊடகங்களுக்கான வழிகாட்டுதல்களை தயாரிக்க வேண்டியுள்ளது.

இதனைத் தவிர, அனுமதிப்பத்திரமுடைய ஒளிபரப்பாளர்களுடன் கலந்துரையாடி ஒழுக்கக்கோவை ஒன்றை தயாரிக்கும் அதிகாரமும் உத்தேச ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவுள்ளது.

விஜயதாச ராஜபக்ஸ தலைமையிலான உப குழு ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக பிரேரித்துள்ள புதிய சட்ட வரைவில், முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான குழுவை நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மூன்று உறுப்பினர்கள் கொண்ட இந்த விசாரணைக்குழுவில் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், பதவி அடிப்படையில் உள்வாங்கப்படுவதுடன் ஊடக, சட்டத்துறையின் இரண்டு நிபுணர்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுவர்.

முறைப்பாடு இருந்தாலும் - இல்லாவிட்டாலும் இலத்திரனியல் ஊடகங்கள் தொடர்பாக விசாரணை செய்யும் அதிகாரம் இந்த குழுவுக்கு வழங்கப்படவுள்ளது. மத, இன ரீதியிலான மோதல்களுக்கு காரணமாக அமையும், தேசிய பொருளாதாரத்துக்கு அழுத்தம் ஏற்படுத்தும் , தேசிய பாதுகாப்பில் தாக்கம் செலுத்தும் செயல்பாட்டை ஒளிபரப்பு அனுமதிப்பத்திரமுள்ள ஒருவர் மேற்கொண்டால், முறைப்பாடு இருந்தாலும் இல்லாவிட்டாலும் விசாரணையை ஆரம்பிக்கும் அதிகாரம் விசாரணைக் குழுவுக்கு வழங்கப்படுகிறது.

இவ்வாறான விசாரணையின் போது குழுவால் கோரப்படும் எந்தவோர் ஆவணத்தையும் வாய் மூல விளக்கத்தையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வழங்குவதற்கு ஒளிபரப்பாளர்கள் இந்த சட்டத்தினால் கட்டாயப்படுத்தப்படுவர்.

நீதிவான் ஒருவரின் தேடுதல் கட்டளைக்கு அமைய அலுவலக நேரத்தில் ஒளிபரப்பு சேவைக்கு சொந்தமான எந்தவொரு வளாகத்துக்குள்ளும் பிரவேசித்து அனைத்து ஒளி-ஒலிப் பதிவுகள், ஆவணங்களை கைப்பற்றுவதற்கான அதிகாரத்தை விசாரணைக் குழுவுக்கு வழங்க வேண்டும் எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

விசாரணை குழுவின் பரிந்துரைக்கு அமைய, இலத்திரனியல் ஊடக அனுமதிப் பத்திரத்தை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரத்து செய்வதற்கு தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அல்லது அபராதம் விதிப்பதற்கான இயலுமை ஒளிரப்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு உள்ளது.

ஒளிரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டத்தின் ஏதேனும் ஒரு சரத்தை மீறுவதற்கு மேலதிகமாக தேசிய பாதுகாப்புக்கு, தேசிய பொருளாதாரத்துக்கு இன, மத நல்லிணக்கத்துக்கு அழுத்தம் ஏற்படுவதாக அனுமானிக்கப்படும் சந்தர்ப்பத்தில் இலத்திரனியல் ஊடக அனுமதிப் பத்திரம் தொடர்பில் தீர்மானிக்கும் உரிமை ஆணைக்குழுவுக்கு கிடைக்கவுள்ளது.

ஆணைக்குழுவின் உத்தரவுகள் அல்லது அதன் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தவறினால் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து விசாரணையின் பின்னர் அபராதம் அல்லது சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படுவதற்கான அதிகாரத்தை வழங்கவும் புதிய ஆவணத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் செயல்பாடுகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திலேயே மேன்முறையீடு செய்ய முடியும்.

இதனிடையே, இந்த சட்டமூலத்துக்கு எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன் கூறுகையில்,

1997 ஆம் ஆண்டும் இதேபோன்ற முயற்சி நீதிமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது. அப்போது, அரசாங்கம் இலங்கை ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலம் என்ற பெயரில் ஒரே மாதிரியான சட்டமூலத்தை கொண்டு வந்தது. மிக முக்கியமான விடயம் என்னவெனில், இந்த சட்ட மூலம் உச்சநீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. இதனை அப்போதைய ஐக்கிய தேசிய கட்சியே முன்னெடுத்தது." - என்றார்.

"ஜனநாயகத்தின் மீதான தாக்குதலாக நாங்கள் இதனைப் பார்க்கிறோம். இது போன்ற செயல்களை செய்ய முயற்சித்தால் அதற்கு எதிராகப் போராடி ஜனநாயகத்துக்கான மக்களின் உரிமையைப் பாதுகாப்போம்", என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இதேநேரம், "ஊடக சுதந்திரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" - என்று சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலர் சாகர காரியவசம் கூறியுள்ளார்.

இதனிடையே, ஒளிபரப்பு அதிகார சபை சட்டத்தை கொண்டுவருவதன் மூலம் ஊடகங்களையோ சமூக ஊடகங்களையோ கட்டுப்படுத்த முடியாது. மாறாக ஊடகங்கள் மேற்கொண்டு செல்லும் நடவடிக்கையை மேலும் சிறப்பாக கொண்டு செல்வதற்கு உதவும் வகையிலேயே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளார் - என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்...

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் தொடர்பில் ஆராய்வதற்காக சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் ஐவர் கொண்ட குழுவை நியமித்தார்.

இந்தக் குழுவில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர், ஜனாதிபதியின் வடக்கு மாகாண அபிவிருத்திக்கான இணைப்பாளர், மாகாண பிரதம செயலாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், களப்பணிப்பாளர் ஆகியோர் உள்ளனர். இந்தக் குழு தண்ணீர் விநியோகத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும். (ஐ)

## தேசிய...

அத்துமீறிய மீன் பிடி தொடர்பில் விவாதிக்கப்பட்டது. இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்கள் கடற்படை பிரதிநிதியாக பங்கேற்ற அதிகாரியிடம் பல கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

கஜேந்திரகுமார் எம். பி., வரவு - செலவுத் திட்டத்தில் 20 வீதமான நிதி பாதுகாப்பு செலவினங்களுக்காக ஒதுக்கப்படுகின்றது. ஆனால், பிறிதொரு நாட்டின் படகுகள் எமது நாட்டுக்குள் வருகை தருவதை உங்களால் கட்டுப்படுத்த முடியாவிட்டால் நீங்கள் தேசிய பாதுகாப்பை செயல்படுத்தவில்லை. யுத்தம் இடம்பெற்ற 2009இற்கு முற்பட்ட காலத்தில் வட பகுதியில் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடி செயல்பாட்டை முன்னெடுத்தார்கள். ஆனால், யுத்தம் முடிந்த பின்னர் தான் இந்த இந்திய இழுவை மீனவர்களின் பிரச்னை காணப்படுகின்றது. யுத்த காலத்தில் இந்த எந்த ஒரு பிரச்னையும் இங்கே காணப்படவில்லை. எனவே, கடற்படையானது தேசிய பாதுகாப்பை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் இந்திய படகுகளை கட்டிப்படுத்தும் விடயத்தில் ஏன் தயங்குகிறார்கள் என்பது தொடர்பில் பாராளுமன்றத்தில் தெரியப்படுத்தவுள்ளோம்- என்றார்.

**அங்கஜன் இராமநாதன் எம். பி.,**

உங்களிடம் ஆளணி இல்லை என்றால் ஏன் அதனை ஏற்கனவே தெரியப்படுத்தவில்லை. கடற்படை உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் அளவுக்கு உங்களுடைய செயல்பாடு உள்ளது. வேறு நாட்டின் படகு உள்ளே வருகின்றது என்றால் தேசிய பாதுகாப்பு எந்த அளவில் உள்ளது என்பதை நாங்கள் பார்க்க முடிகின்றது. அடுத்த கூட்டத்துக்கு வரும்போது இந்த இந்திய மீனவர்களை கட்டுப் படுத்த கடற்படையால் என்ன செய்ய முடியும் என்பது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரினார். (ஐ)

## கசிப்பு...

சேர்த்த நிலையில் உயிரிழந்தார்.

அந்த இளைஞர் கசிப்பு அருந்தியிருந்தார் என்ற முதல் கட்ட விசாரணை களில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, புங்குடுதீவில் சட்டவிரோதமான கசிப்பு மற்றும் போதை பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளது. பிற பிரதேசங்களில் இருந்தே இங்கு கடத்தி வரப்படுவதாகவும் இவற்றைத் தடுக்க பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஐ)

## யாழ்ப்பாணத்து...

வருகின்றது. குழாய்கள் அமைக்கும் பணி நடக்கிறது. இது நீண்ட காலமாக நடந்து வருகிறது.

ஆனால், புதைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் குழாய்களின் ஊடாக தற்போது காற்றுக்கூட வருகிறதோ தெரியவில்லை. ஆனால், இந்த குடிதண்ணீரை கொண்டு வருவதில் அரசியல்வாதிகள் அசமந்த போக்கைக் காட்டுகிறார்கள் - இதுதான் உண்மை. இந்த அரசியல்வாதிகள் யாரும் யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் பிரச்னை தொடர்பில் கதைத்ததாக இல்லை.

அண்மையில், புதிதாக கடமையேற்ற ஆளுநரிடமும் நான் இந்த விடயம் தொடர்பில் பேசியுள்ளேன். எனவே, குடிதண்ணீரைக் கொண்டு வருவதற்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே, நாங்கள் வடக்கு மாகாண சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி தீர்மானத்தை பிரதமர் பணிமனைக்கு அனுப்பியிருந்தோம். எனவே, கிடப்பில் கிடக்கும் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த ஒருங்கிணைப்பு குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

மற்றும் சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்த வேலைத் திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார். இது அனைத்து தொலைக்காட்சி, வானொலியில் ஒளி/ஒலிபரப்பாகும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## இந்திய...

இந்திய மீனவர்கள் வந்தால் கட்டுப்படுத்தலாம். ஆனால், அதிகளவில் வருவதால் எம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை. அதாவது, கட்டுப்படுத்துவதற்குரிய பூரணமான வளங்கள் எங்களிடம் இல்லை. குறிப்பாக, ஆளணி உபகரணங்கள் எங்களிடம் இல்லை.

எனவே, அதனை இராஜதந்திர முறையில் கட்டுப்படுத்துவதுதான் சிறந்தது.

நமது கடல் பிரதேசமானமானது பெரிய பிரதேசம். முழுவதிலும் கடற்படை செயல்படுகின்றது. எனினும், எம்மால் முயன்றவரை நாங்கள் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துகின்றோம். குறிப்பாக, கடந்த வருடம் மாத்திரம் 12ஆயிரம் கிலோ கேரளா கஞ்சாவை கைப்பற்றியுள்ளோம். இதேபோல், போதைப் பொருள் விநியோகம் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தி அதற்குரிய நடவடிக்கையும் எடுத்து வருகின்றோம்.

இந்திய மீனவர்களை துப்பாக்கி முனை யில் கட்டுப்படுத்த நாங்கள் இன்று வரை முயற்சிக்கவில்லை. மனிதாபிமானமாக செயல்படுகின்றோம். அவர்களை மீன்பிடி தொழிலாளர்களாகவே பார்க்கின்றோம். எனவே, கடற்கடை தேசிய பாதுகாப்பை செயல்படுத்தவில்லை என நீங்கள் கருத வேண்டாம் - என்றார். (ஐ)

## பொருளாதார...

ஆர்வம் காட்டுவதாக சீன துணை அமைச்சர் நேற்றுமுன்தினம் ஜனதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தபோது அவர் குறிப்பிட்டார்.

நெருக்கடியான காலப்பகுதியில் இலங்கைக்கு சீனா வழங்கிய அசைக்க முடியாத ஆதரவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீன பிரதி அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இலங்கையுடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக்கொள்வதில் சீனாவின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்திய பிரதி அமைச்சர், இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகளை ஆராய சீனா ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ஐ)

## தையிட்டி...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விகாரையை அகற்றக் கோரி போராட்டம் நடத்தியது. இதன் பின்னர், கடந்த மே 23ஆம் திகதி முதல் நான்கு நாட்கள் பகல் - இரவு என தொடர்ச்சியாக போராட்டத்தை முன்னணியினர் மேற்கொண்டனர்.

இந்த நிலையில், மூன்றாவது கட்டமாக நேற்றைய தினம் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். பொசன் போயா தினம் வரும் சனிக்கிழமை வருகிறது. இதையொட்டி நடைபெறும் பூசையை தடுக்கும் நோக்கிலேயே இந்தப் போராட்டம் நடைபெற்றது.

விகாரைக்கு செல்லும் வழிகள் மறிக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்த நிலையில், முன்னணியின் எம். பிக்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். நீண்ட வாக்குவாதத்தின் பின்னர், பொலிஸாரின் கட்டளையை மீறி எம். பிக்களும் போராட்டக்காரர்களும் விகாரையின் முன்புறமாகவுள்ள காணிக்கு சென்று அங்கிருந்து போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

நேற்றிரவும் தொடர்ந்த போராட்டம் நாளை மறுதினம் வரை தொடரும் என்று அறிய வருகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# யாழ்.மாவட்டத்துக்குள் டெங்கு கட்டுப்பாட்டில்

## பிராந்திய சுகாதார பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 01

**யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயானது கட்டுப்பாட்டில் உள்ளது என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

**மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட டெங்கு ஒழிப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து டெங்குநோயின் தாக்கம் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் குறைந்தளவில் உள்ளது. அதேபோல டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மாவட்டம் முழுவதிலும் முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக அண்மைய நாட்களில் டெங்கு நோயினால் இறப்பு ஒன்று ஏற்பட்டுள்ளது. இராணுவ சிப்பாய் ஒருவர் டெங்கு நோயினால் இறந்துள்ளார். எனினும் தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயானது கட்டுப்பாட்டில் உள்ளது-என்றார். (அ-03)

# பஸ் கட்டணத்தை குறைக்கமுடியாது

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்

கொழும்பு, ஜூன் 01

டீசல் விலை குறைப்பு காரணமாக எதிர்காலத்தில் பஸ் கட்டணத்தைக் குறைக்கமுடியாது எனவும், உதிரிப்பாகங்கள் மற்றும் ரயர்களின் விலையை குறைக்கும் வேலைத்திட்டம் தேவை எனவும் அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பஸ்களில் பயன்படுத்தப்படும் பற்றரி ஒன்றின் விலை 35,000 ரூபாவிலிருந்து 80,000 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும், ரயரின் விலை ஒரு இலட்சம் ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

ரயர் ஒன்றை மீள நிரப்புவதற்கு 25,000 ரூபா தேவைப்படுவதாக தெரிவித்த அவர், தற்போது மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளதால் சில உதிரிப்பாகங்களின் விலை 500 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் கூறினார்.

கடந்த காலங்களில் டீசல் விலை குறைப்பின் காரணமாக பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட்டதாகவும், இதன் மூலம் பஸ் வருமானம் குறைந்தாலும் பஸ்களின் பராமரிப்புக்கான செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் குறிப்பிட்டார். (அ)

# தனியார் கல்வி நிலையங்களுக்கு யாழில் பொலிஸாரின் பாதுகாப்பு!

## ஒருங்கிணைப்புக் குழுவில் நேற்று முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ். மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களுக்கு அருகாமையில் சனி, ஞாயிறு தினங்களில் பொலிஸாரின் பிரசன்னத்தை அதிகரிப்பதற்கு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் தனியார் வகுப்புகள் இடம்பெறும் இடங்களுக்கு அண்மையில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புக் கடமைகளை அதிகரிக்குமாறு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவால் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த விடயத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரால் அங்கு உறுதியளிக்கப்பட்டது.

கடந்த வாரம் முதல் தனியார் வகுப்பு நிலையங்களுக்கு அருகில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதோடு பாதுகாப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுவதாகவும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (அ-03)

# தாய்லாந்து பறந்தார் பிரதமர்

கொழும்பு, ஜூன் 01

பிரதமர் தினேஷ் குணவர்தன உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு தாய்லாந்து சென்றுள்ளார்.

பிரதமர் நேற்றுக் காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து தாய்லாந்து நோக்கிப் புறப்பட்டார்.

பிரதமருடன் 11 பேர் தாய்லாந்துக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ரூ. 14 கோடி பெறுமதியான தங்கத்துடன் இலங்கையர் இருவர் இந்தியாவில் கைது

சென்னை, ஜூன் 01

இலங்கையில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட சுமார் 14 கோடி ரூபா பெறுமதியான தங்கம் தமிழகத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் நள்ளிரவு, கடலோர பாதுகாப்புப் படையினர், மண்டபம் கடற் பரப்பில், கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டபோது, இலங்கையில் இருந்து பயணித்த நாட்டுப் படகு ஒன்றை அவதானித்த நிலையில், அதனைச் சுற்றிவளைத்து சோதனையிட்டனர்.

குறித்த படகில் பயணித்த இருவரை விசாரணைக்கு உட்படுத்தினர்.

இதன்போது, அவர்கள் இலங்கையில் 14 கோடி ரூபா மதிப்பிலான 8 கிலோ தங்கத்தை கடத்திச் சென்றமை கண்டறியப்பட்டுள்ளதாக, தமிழக ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இதையடுத்து, கைப்பற்றப்பட்ட தங்கத்தையும், படகையும் பறிமுதல் செய்த கடலோர பாதுகாப்பு படையினர், இரண்டு சந்தேகநபர்களையும் கைதுசெய்து மேலதிக விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். (அ)

# 400 போதை மாத்திரைகளுடன் முல்லைவாசிகள் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 01

முல்லைத்தீவைச் சேர்ந்த இருவர் பேலியகொடையில் வைத்து 400 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலை அடுத்து, பேலியகொடை துட்டகைமுனு பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரண்டு சுற்றிவளைப்பு தேடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது, போதையூட்டும் 400 மாத்திரைகள் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

28 வயதான இருவரும் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# யூரியா விலை மேலும் குறைப்பு

கொழும்பு, ஜூன் 01

யூரியா உரத்தின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அதன்படி, ஜூன் மாதம் 15ஆம் திகதி முதல், 50 கிலோ கிராம் யூரியா மூடை ஒன்றின் விலை 9,000 ரூபாவாக நிர்ணயிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# அரியாலையில் மட்டுமே சீனர்களின் கடலட்டை இனப்பெருக்க நிலையம்!

## அமைச்சர் டக்ளஸ் கூறினார்

யாழ்ப்பாணம், ஜூன் 01

அரியாலைப் பகுதியில் மட்டுமே சீனர்களுக்குச் சொந்தமான கடலட்டை குஞ்சு இனப்பெருக்க நிலையம் காணப்படுகின்றது. அதைவிட வேறு எவ்விடத்திலும் சீனர்களுக்கு அட்டைப் பண்ணைகள் உரிமம் இல்லை. கடலட்டைப் பண்ணை வழங்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கடற்தொழிலாளர்களாகவே காணப்படுவதுடன் மிக கணிசமானவளவானோர் கடற்றொழிலுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கடற்றொழில் அமைச்சரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ்



தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தற்போது யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் டக்ளஸ் இவ்வாறு கூறினார்.

பண்ணை பகுதிக்கு அண்மையில் சட்ட விதிமுறைகளை மீறி கடற்தொழில் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும், அங்கு நேரடியாக கள விஜயம் மேற்கொண்ட பின் ஆராய்ந்து அடுத்த கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-03)

# ஓட்டோக்களுக்குக் கட்டண மீற்றர் யாழ்.மாவட்டத்தில் கட்டாயமானது

## ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஓட்டோக்களுக்கு கட்டண மீற்றர் பொருத்தப்படவேண்டும் எனவும், அவ்வாறு கட்டண மீற்றர் பொருத்தாத ஓட்டோக்களுக்கு ஓட்டோ தரிப்பிடங்களில் நின்று சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பாக கட்டண மீற்றர் பொருத்துவதற்கான கட்டணத்தைக் கட்டண மீற்றர் பொருத்தும் நிறுவனத்துடன் கலந்தாலோசித்து ஓட்டோ உரிமையாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் அறவிடுவதற்கு ஏற்பாடுகளை செய்யுமாறும் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.